# கல்கி

6-3-66



ஜெனரல் இயோன்சி

# கேள்வி ? பதில்

**(1) இந்தியாவின் உணவுப் பஞ்சத்தைக் காரணம் காட்டி உலகம் பூராவும் உதவிநிதி திரட்டப்படுவதின் பொருள் என்ன?**

சுமார் 20,000 கோடி ரூபாய்களைக் கடந்த 19 ஆண்டுகளில் இந்தியாவெங்கணும் முதலீடு செய்துவிட்டு, இந்தியக்குடிமகன் ஒவ்வொருவனையும் சுமார் 85/- ரூபாய் அளவுக்குக் கடனாளியாக்கிவிட்ட பின்னரும், இந்தியாவைப்பற்றி அந்த நாடுகள் என்ன நினைத்துக்கொண்டிருக்கின்றன என்பதற்கோர் எடுத்துக்காட்டுதான் அது!

**(2) காமராசரது உணவுக் கொள்கையை மத்தியஅரசு ஏற்றுக்கொள்ளவதில்லையா என்ன?**

காமராசரது எந்தக் கொள்கையைத்தான் மத்திய அரசினர் ஏற்றுக்கொள்கின்றனர் என்று நீர் நினைக்கிறீர்? 'ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனி'களே சோஷலிசக்கொள்கையின் அடிப்படையைத் தகர்ப்பன என்று அவர் கருதுகிறார். எதிர்காலத்தில் அப்படிப்பட்ட திட்டத்தால்தான் விவசாய உற்பத்தியைப்பெருக்க முடியும் என்று நினைக்கின்றனர் தற்போதைய அமைச்சர்கள். இந்த ஒரு பருக்கையே பதம் பார்க்கப் போதாதா?

**(3) காமராசரைப் பற்றி ஏதோ ஒரு வெளிநாட்டு இதழ் ஒரு மாதிரியாக விமர்சித்துள்ளது என்று பேசிக்கொள்கிறார்களே, உண்மையா?**

நெருப்பில்லாமல் புகைவதில்லை என்று உனக்குத் தெரியாதா? காமராசருக்கு, "அயல் நாட்டுக் கொள்கையிலும், உள்நாட்டுப் பாதுகாப்புக் கொள்கையிலும் அரசியற் கோட்பாடுகளிலும் பூரண அக்கறை கிடையாதென்று அமெரிக்க இதழான 'நியூயார்க் டைம்ஸ்' எழுதி இருக்கிறது; அது மட்டுமல்ல, 'காமராசரின் சாதனை என்பது அவர் காங்கிரசை மாற்றி யமைப்பதில் இல்லையென்றும், பல்வேறு கொள்கையுள்ள கட்சிகளின் சக்தியைப் பயன்படுத்துவதிலேயே இருப்பதாகவும் அந்த இதழ் எழுதியுள்ளது.

**(4) மாநில அரசின் பட்ஜெட், அரசாங்கச் சிப்பந்திகளை ஏமாற்றமடையச் செய்துவிட்டது என்பதை நீங்கள் மறுக்கிறீர்களா?**

நீர் அரசாங்க ஊழியர் போலும்; உம்மைப்பற்றி நீர் கவலைப்படுகிறீர். விவசாயி தன்னைப் பற்றிக் கவலைப்படுகிறான். வியாபாரி அவரைப் பற்றிக் கவலைப்படுகிறார். மொத்தத்தில் மாநில மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களைப் பற்றிக் கவலைப்படுகின்றனர், மாநில அரசு பட்ஜெட்டையும், மத்திய அரசு பட்ஜெட்டையும் கண்டு. பொதுவாக பட்ஜெட் ஆண்டு என்றாலே விலை உயர்வு ஆண்டு என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது.

**(5) நாலாவது திட்டத்திலாவது இந்திய உணவுப் பற்றுக்குறை தீர்க்கப்பட்டுவிடுமா?**

முதல் திட்டத்தின் இறுதியாண்டிலிருந்து இப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாலாம் திட்டத்தின் தொடக்க காலத்திலும் இப்படித்தான் சொல்கிறார்கள். இன்னுமா விளக்கம் வேண்டும்!

**(6) வர வர இந்திய மாநில சட்டசபைகளிலே கூச்சல், குழப்பம் அதிகமாகிக் கொண்டிருக்கிறதே, காரணம் என்ன?**

இந்தியநாடு, தனது உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாட்டில் தன்னை முழு அளவுக்கு ஐக்கியப் படுத்திக்கொண்டு வருவதால் தானே!

**(7) இந்த நாட்டு எதிர்க்கட்சிகளைப் பற்றி காங்கிரஸ் என்னதான் கருதுகிறது?**

'காங்கிரஸ்' என்ன கருதுகிறதோ, 'புதிய காங்கிரஸ்காரர்கள்' தாங்கள் எந்த அளவுக்கு விலைப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் 'தோலும் துருத்தியும்' மூலம் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்!

**(8) அமெரிக்க உதவியைப் பல பேர் எதிர்க்கிறார்களே ஏன்?**

அமெரிக்க அரசின் வியட்நாம் கொள்கையை (இயன்ற அளவுக்குக்) குறை கூறாமலிருக்க இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது என்று அமெரிக்க உதவி ஜனாதிபதி கூறி இருக்கிறார். இது எதைக் குறிக்கிறது? முன்பு லால் பகதூரின் அமெரிக்க விஜயம் இதே கொள்கையின் மீதுதானே அதிபர் ஜான்சனால் ரத்துச் செய்யப்பட்டது!! வியட்நாம் விவகாரத்தை அமெரிக்கர்களே எதிர்க்கத்தொடங்கிவிட்டார்கள்; அத்துமீறிய வெளிநாட்டு உதவிகள் உள்நாட்டு விவகாரத்தில் எந்த அளவுககுத் தலையிடச் செய்கிறது என்பதை நடுநிலையாளர்கள் நன்கு கணிக்கிறார்கள்; அந்தக் 'கணிப்புக்கள்'தான் எதிர்ப்புக்களாக உருவெடுக்கின்றன. ஆனால் அமைச்சர் சுப்பிரமணியமோ வெளிநாடுகள் நமக்கு அளிக்கும் (கடன்) உதவியே நம் நாட்டின்நாணயத்தையும், பொருளாதார வளத்தையும் மதிப்பிடுவன என்று பேசிக்கொண்டிருக்கிறார்

## விற்பனையாளர்களுக்கு

மார்ச் இறுதியுடன் ஆண்டுக் கணக்கு முடிக்க வேண்டியிருப்பதால் ஏஜண்டுத் தோழர்கள் பாக்கித் தொகைகளை மார்ச் மாத பில்லுடன் சேர்த்துத் தவறாமல் அனுப்பி வைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

உரிமையாளர்
"காஞ்சி"

காஞ்சி

மலர் 2 6—3—66 இதழ் 32

# விழா

அறுவைத் துறை வித்தகர் அம்பலத்தாடி கேட்கிறார், "அறுவைக் கருவிகளைக் கொதிநீரில் போட்டுச் சுத்தம் செய்யாததானே என்னிடம் கொண்டுவந்து கொடுத்தாய்?" என்று, மருத்துவமனைப் பணியாளரிடம்; அறுவை வெற்றிகரமாக நடைபெற்றான பிறகு!! அறுவை செய்து கொண்டவனோ அலறவில்லை, துடிக்கவில்லை; அமைதியாக இருக்கிறான்; அவனை வாட்டி வதைத்த நோயை விரட்டி வெற்றி கண்டுவிட்டான்; இறந்துவிட்டான்!!

கதைகூட இவ்விதம் இருந்திடின், நம்ப மறுப்பர் பலரும்; ஆனால் இதற்கு ஒப்பான நிலையினை நாடாள்வோர் உண்டாக்கி வைத்துள்ளனர்! பதினெட்டு ஆண்டுகள், ஆண்ட பிறகு—எவரும் எமக்கு ஈடு இல்லை—எதிர்ப்பார் ஒருவர் இல்லை—என்று எக்காளம் கிளப்பி ஆண்டான பிறகு, நாட்டிலே மக்கள் நலிவுடன் இருப்பதாகப் பெருங்குரல் எழுப்புகிறார்களே, ஏன்! என்று வியப்படைந்து, நாட்டுப் பொருளாதார நிலையினைக் கண்டறிந்திட ஒரு 'குழு' அமைத்துள்ளனர்; ஜெய்ப்பூரில் கூடி மாநாடு நடத்தியபோது.

நாட்டுப் பொருளாதார நிலை பற்றி, முன்பே பல அரசியல் கட்சிகள் எடுத்துக் காட்டியுள்ளனவே; பொருளாதாரத் துறை விற்பன்னர்கள் விளக்கி உள்ளனரே; ஏன் இப்போது ஒரு புது ஆராய்ச்சி; ஒரு குழு; என்று எவரேனும் கேட்டிடுவரோ! எங்ஙனம் கேட்டிட முடியும்? இது சாதாரணக் குழு அல்ல; தனிக் குழு!

நாட்டிலே உற்பத்தியான செல்வம் எங்கு சென்றுளது. எவரெவரிடம் சிக்கிவிட்டது என்பதுபற்றி கண்டறிந்திட, முன்பு ஒரு குழு அமைத்தனர்; பேராசிரியர் மகலானோபிஸ் தலைமையில்; அறிக்கை வெளியிட்டிருக்கிறது அந்தக் குழு.

பொருளாதாரத் துறையில் பெரிய புள்ளிகளின் பிடி எத்தனைக் கெட்டிப்பட்டு விட்டிருக்கிறது என்பதனைக் கண்டறிய ஒரு குழு அமைத்தனர்; அக்குழுவும் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

தெளிந்த அறிவும், ஏழையர் தொடர்பும் மிகுதியும் கொண்டவர் என்ற விருது அளிக்கப்பட்ட தேபர், ஏழை எளியோர் நிலை பற்றிய கருத்தினை அறிவித்திருக்கிறார்.

அரசியல் கட்சிகளில்கூட ஈடுபடாமல் ஒதுங்கி இருந்து மக்கள் பணியாற்றிவரும் ஜெயப்பிரகாச நாராயணர், ஏழையர் படும் துயர்பற்றி எண்ணற்ற முறை எடுத்துக் கூறிவிட்டார்.

காந்திய நெறியினிலே தமது வாழ்க்கையைப் பிணைத்துக்கொண்டு விட்டுள்ள ஆசார்ய வினோபாபாவே மக்கள் படும் அல்லல் பற்றி எடுத்துக் காட்டி ஆட்சியினருக்கு அறிவு கொளுத்த முற்பட்டார்!

பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது கேள்விகள் எழுப்பி துரைத்தனத்தாரிடமிருந்து பெற்றுள்ள பதில்கள், நாட்டு மக்கள் படும் தொல்லைகளை நன்கு விளக்குகின்றன.

இவ்வளவும் போதாமல், இப்போது புதிதாக, தனியாக, ஒரு குழு அமைத்து, நாட்டு நிலையினைக் கண்டறியச் சொல்லிவிட்டிருக்கிறார்கள். மறைந்த கல்கி ஒருமுறை கூறினார், ஒரு காரியத்தைச் செய்திட விருப்பமில்லாதபோது அதற்காக ஒரு 'கமிட்டி'யைப் போடு என்பதாக! நகைச்சுவையுடன். இப்போது ஒரு தனிக் கமிட்டி போட்டிருக்கிறார்கள், நாட்டின் பொருளாதார நிலையைக் கண்டறிந்து கூறிட!

ஆனால் இந்தக் கமிட்டியின் அறிக்கைக்காகக் காத்துக்கொண்டிராமல், புதிய நிதி அமைச்சர் நாட்டுப் பொருளாதார நிலை பற்றிய அறிக்கையினைத் தந்திருக்கிறார்.

உற்பத்திக் குறைந்துவிட்டிருக்கிறது.

விலைகள் ஏறிவிட்டிருக்கின்றன.

நாட்டு மக்களின் வருமானம் குறைந்துவிட்டிருக்கிறது.

சர்க்காருக்குள்ள கடன் சுமை ஏறிக்கொண்டு வருகிறது.

வெளிநாடுகளை நம்பிக் கிடந்திடும் கேவலம் வளர்ந்தபடி இருக்கிறது.

சர்க்கார் துறையிலே வீண்செலவு குறையக் காணோம்.

இன்னோரன்ன பிற 'வேதனைகளை'த் தமது அறிக்கை மூலம் விளக்கிக் காட்டுகிறார், புதிய நிதி அமைச்சர்.

எல்லாம் எப்போது? அறுவை முடிந்த பிறகு! ஆண்டு பதினெட்டு ஆன பிறகு!!

தொடர்ந்து, பிடிவாதமாக, அடுக்கடுக்காக, இத்தனை 'வேதனைகளை' மூட்டிக்கொண்டு ஒரு ஆட்சி இருக்கவே முடியாது; எந்த நாட்டிலும். இது புண்ணிய பூமி! பொறுத்துக் கொள்கிறார்கள். பிற இடங்களில் பொங்கி எழுவார்கள்; இங்கு குமுறி அழுகிறார்கள் மக்கள்! ஆளவந்தார் புதுப் புது கமிட்டி அமைக்கிறார்கள்!!

விதவிதமான கருத்துக்களை வீசுகிறார்கள் ஆட்சியினர் ஒவ்வோர் பிரச்சினைக்கும்; ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையிலேயேகூட; துணிவுடன். என் என்று கேட்க ஆள் இல்லை என்ற நினைப்பு தடித்திடும்போது, துணிவு வராதா! நிரம்ப!!

அரசாள வந்துள்ள அம்மையார் கூறுகிறார் நாட்டிலே பஞ்சம் இல்லை! பற்றுக்குறைதான் உளது!! என்று.

பாம்பு கடிக்கவில்லை, பல்லைத்தான் பதித்துவிட்டுப் போயிருக்கிறது என்று வேடிக்கைக்காக யாரேனும் கூறிடின் உடனே கேட்போம், பைத்தியக்காரா! இரண்

டிலே எதுவாக இருந்தால் என்ன? ஆள் துடிக்கிறானே தெரியவில்லையா? என்று. உயர உட்கார்ந்துள்ளவர்கள் அதுபோலப் பேசும்போது அது 'தத்துவம்' ஆகிவிடுகிறது. பஞ்சம் இல்லையாம்! பற்றாக்குறைதான் இருக்கிறதாம். இங்கே அமைச்சர் சிலர் அறிவைப் பொழிந்தார்கள் அல்லவா? 'கியூ' நிற்பது உணவு நெருக்கடியையும் அதனால் மூண்டிடும் வேதனையையும் காட்டவில்லை, மக்களிடம் வளர்ந்துள்ள ஒழுங்கு முறையையும், கட்டுப்பாட்டு உணர்ச்சியையும் காட்டுகிறது என்று! அதுபோல!! ஆன்றோரும் சான்றோரும் கூறுவர் சாவு என்பதை பெருந்தூக்கம்! என்று சொல்லலாம்; எங்கே? செத்தவரைக் கண்டு மற்றவர்கள் மாரடித்து அழுதுகொண்டுள்ள இடத்திலா! அவதிப்படும் மக்களிடமே பேசுகிறார்கள் அமைச்சர்கள், துணிவுடன்.

பஞ்சம் இல்லை, பற்றாக்குறைதான்

என்று. கேட்டுக்கொள்ளவேண்டி இருக்கிறது; ஏன்? அந்த அளவுக்குத்தான் ஜனநாயக உணர்வு வளர்ச்சி பெற்றிருக்கிறது.

இந்த நிலைகண்டுதான் பலர், இந்த மக்களிடம் புத்துணர்ச்சி, விழிப்புணர்ச்சி எழுவதேது, ஜனநாயக ஆர்வம் வெற்றிபெறுவதேது, இவர்கள் வேதனைகளைச் சுமப்பதற்கு என்றே பிறந்தவர்கள், இவர்களை நம்பி ஆட்சியாளர்களை எதிர்த்துக்கொண்டிருப்பது வீண் வேலை என்று முடிவுசெய்துகொண்டு, அவரவர் பிழைக்கும் வழியைப் பார்க்கலாம் என்று சென்றுவிட்டனர்.

தி. மு. கழகம் அவ்விதம் அச்சமோ, ஆயாசமோ கொள்ளாததற்குக் காரணம், மக்களிடம், அவர்களின் அறிவுத்தெளிவில், ஆற்றலில் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கைதான்.

வேறு எந்தவிதமான வலிவும் அற்றநிலையில் உள்ளவர்கள் கூடி நடத்திடும் கழகம், பொதுமக்களிடம் கொண்டுள்ள நம்பிக்கை தந்திடும் உற்சாகத்தின் துணையை மட்டுமே பெற்று, தன் கடமையினைச் செய்து வருகிறது; வெற்றிகண்டு வருகிறது. எத்தனையோ இடர்ப்பாடுகளைக் கண்டு கழகம் கலங்காமலிருப்பதற்குக் காரணம் இதுவே. எத்தனையோ இழிமொழிகள் வீசப்படும்போதும் கவலைகொள்ளாதிருப்பதன் காரணமும் இதுவே. எடுத்துக்கூறவேண்டிய முறைப்படி கூறிடின், மக்கள் உண்மையை உணர்வர்; உணர்ந்திடின் உறுதியுடன் எழுவர்; வெற்றிபெறுவர்; என்பதிலேஉள்ள நம்பிக்கையே கழகம் என்ற கலத்துக்குப் பாய்மரம்!

மாமேதைகள் என்ற பட்டம் பெற்றோர், மாளிகைவாசிகள் என்ற விருதுபெற்றோர் பதவியில் புரளும் நிலையினர், அல்லது அவர்பக்கம் நின்று பல்லிளித்துப் பயன்பெறுவோர் ஆகியோர் கூறிடும் பேச்சுக்களைக் கேட்டிடவும் மதிப்பளித்திடவும் பொதுமக்கள் மறுத்துவிட்டதுடன், இந்தக் கழகத்தவர் கூறுவது உண்மை, நமக்காகக் கூறுகிறார்கள், நல்லதற்குக் கூறுகிறார்கள் என்ற உணர்வுடன், ஆர்வத்துடன், நமது பேச்சினைக் கேட்டு புத்தார்வம் பெற்று, நமக்குப் புதுவலிவு அளித்துக்கொண்டு வருகின்றனர்; அந்த நிலை வளர்ந்தபடியும இருக்கிறது.

இந்தத்தொடர்பு, நமதுதொண்டு மேலும் தூய்மையாக—தரமுள்ளதாக இருந்திடவேண்டும் என்ற மெய்யுணர்வை நமக்கெல்லாம் தந்திடவேண்டும்.

அத்தகைய உணர்வுடனேயே, கொடி வார விழாவினிலே ஆர்வம்காட்டி வெற்றி ஈட்டித் தந்த போது மக்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறோம்.

சிற்றூர்களிலும் எழுச்சியுடன் இந்த விழா நடைபெற்றிருக்கிறது. கழகத் தோழர்களின் முகத்திலேயே ஒருபுதியபொலிவு மலர்ந்திருக்கிறது. மக்கள் காட்டிடும் தோழமை எனும் மாநிதியைப் பெற்றிருக்கிறோம் என்ற பெருமிதம், கழகத் தோழர்களின் விழியில் ஒளிவிடக் காண்கிறோம்.

இது துவக்கம்; அடைய வேண்டியதை அடைந்துவிட்டோம் என்ற அக மகிழ்ச்சி தாலாட்ட உறங்கச் சென்றிடும் கட்டமாகிடக் கூடாது.

இத்தனை ஆர்வம் இருந்திடும்போது, மக்கள் இத்தனைத் தோழமை உணர்வு கொண்டுள்ளபோது, நமக்கேது குறை என்ற உற்சாகம் பெற்று, மேலும் பணியாற்றிடத் தூண்டும், அழைப்பு—இந்த விழா.

முகப்பில்:

## ஜெனரல் இயோன்சி

நைஜீரியத் தளபதி இயோன்சி என்பவரைப் பற்றி அதிவிரைவில் புத்தகவடிவில் ஒரு வரலாற்று நூலை இந்த வையம் சந்திக்க இருக்கின்ற இந்த நேரத்தில், அந்தப் புத்தகத்தின் கதாநாயகரை இருக்கப்போகும் தளபதி இயோன்சியின் படத்தை இவ்வார இதழ் முகப்பில் தாங்கி வந்துள்ளது.

ஆப்பிரிக்க நாட்டுப் பிற தளபதிகளைப் போலல்லாமல் இவர் மட்டும், ஏடுகளின், இதழ்களின் செய்திப் பொருளாக ஆகிவிட்டதற்கு முக்கியமான காரணம் இவர் மற்றவர்களைப் போலல்லாமல், தனியானதொரு அம்சம் உடையவராக இருக்கிறார் என்பதுதான்.

முதலை போன்றதொரு அடையாளச் சின்னத்தைக் கொண்டே, தம் எல்லா அலுவல்களையும் கவனித்து வெற்றிகாணும் 6 அடி உயரமுள்ள இந்த நீண்ட நெடும் தளபதி, சாதாரண ராணுவ வீரராக இருந்து சிறந்த சேவையாலும், அசாதாரணத் திறமையாலும் அண்மையில் இப்பதவியை எட்டிப் பிடித்தார்.

ஐ. நா. கொடியின் கீழ், காங்கோவில், புரட்சியின்போது அதை மிகச் சாதுரியமாகச் சமாளித்து வெற்றி பெற்றார். ஆஸ்திரேலிய அரசாங்கத்தால், இதற்காகப் பாராட்டும், பரிசளிப்பும் பெற்றிருக்கிறார்.

நைஜீரியாவின் நெருக்கடி மிக்க சந்தர்ப்பங்களை இவர் முகமலர்ச்சியோடு சமாளிக்கும் திறன் கண்டு அரசியல் வாதிகள் உட்பட அனைவருமே பாராட்டும்போது, நாடும், நீங்களும் பாராட்டுவது மிகைப்படாதல்லவா?

தம்பி

# வெள்ளை மாளிகையில்! (5)

ஆதிக்கம் செலுத்தும் போக்கு ஒவ்வோர் நாட்டில் ஒவ்வோர்விதமான வடிவம்கொள்ளு
கிறது; கருவியைத் தேடிப்பெற்றுக்கொள்கிறது. வடிவமும கருவியும் வகையில்லை பலவாக
இருப்பினும் நோக்கம் மட்டும் ஒன்றுதான், எளியோர்தமை வல்லோர் சிலர் வதைபுரிவதுதான்.
வலியோராகச் சிலர் இருப்பதற்குக் காரணம் பலபல; கட்டத்துக்குக் கட்டம், நாட்டுக்கு நாடு
இக்காரணம் வேறு வேருக இருந்திடும்.


இனம், மதம், மொழி, நிறம், பணம் என்பவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் காலத்தில்,
ஒவ்வோர் நாட்டில், ஆதிக்கக் கருவியாகப் பயன்பட்டு வருவதைக் காண்கிறோம். இந்த ஆதிக்
கத்தின் எந்த வடிவத்தை ஆராய்ந்திடினும், ஒரு பொதுவான பாடம் கிடைத்திடும். அதற்கா
கவே 'நிறம்' காரணமாகப் புகுத்தப்பட்டுள்ள ஆதிக்கத்தைக் குறித்துச் சிறிதளவு விரிவாகவே
விளக்கிக்கொண்டு வருகிறேன். நிறம் என்பது கருவியாக அமைந்திருப்பதுபோல, இனம்,
மதம், பணம் என்பவைகளிலே ஏதேனும் ஒன்று கருவியாக அமைந்திடினும், கொடுமையின்
அளவு குறைவானதாக இருந்திடாது. எனவேதான், எங்கோ அமெரிக்காவில் கப்பிக்கொண்
டுள்ள நிறவெறிபற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்வது வேறு விதமான கருவியின் துணை
யுடன் இருந்து வரும் ஆதிக்கம்பற்றி எண்ணிடவும், பாடம் பெற்றிடவும் வழி காட்டும் என்ற
எண்ணத்துடன் இத்தனை விரிவாக எழுதிக்கொண்டிருக்கிறேன். பிரச்சினை எங்கோ நெடுந்
தொலைவில் இருப்பது என்றோ, நமக்குச் சம்பந்தமில்லாதது என்றோ எண்ணிக்கொண்டு, பெற
வேண்டிய பாடத்தினை இழந்துவிடக்கூடாது.

மதவெறி குறையவில்லை, ஜாதிப்பித்தம் போகவில்லை, குலச்சண்டை ஒழியவில்லை
என்று பிறநாடுகள் குறித்து மிகக்கேவலமாகப பேசும் வாடிக்கை பொதுவாக மேனாட்டினருக்கு
உண்டு. மேனாட்டினரில் புரட்சிக் கருத்துக்களையும் புதுமுறை அரசியலையும் மேற்கொண்டவர்
கள் அமெரிக்கர்கள். அமெரிக்காவுக்கு 'மே பிளவர்' என்ற கப்பலில் ஐரோப்பிய நாடுகளி
லிருந்து, மதக்கொடுமை, அரசியல் ஆதிக்கக் கொடுமை ஆகியவற்றிலிருந்து விடுபட, கருத்
துச் சுதந்திரம் பெற்றிட, மனிதத்தன்மையைப் போற்றிப்பேணிடக் கிளம்பியவர்கள், 'அமெரிக்
கர்கள்' ஆனபிறகு, கொடுமையான ஒரு ஆதிக்கத்தை, நிறவெறியைக் கருவியாகக் கொண்டு
புகுத்திவிட்டனர்; அதனை மிருகத்தனமாக இன்றும் நடத்திக்கொண்டு வருகின்றனர்.

இந்த இயல்பு, அமெரிக்கர் மட்டுமே பெற்றுள்ளது என்று எண்ணிக்கொள்ளக்
கூடாது.

ஆதிக்கத்தை எதிர்த்து நின்று ஒழித்தவர்கள், கொடுமைகளைத் தாக்கித்தகர்த்தவர்கள்,
பிறகு தாமே ஆதிக்கம் செலுத்துவோராகவும, கொடுமையாளர்களாகவும் மாறிவிடுகின்றனர்.
எப்போது? தங்கள் நிலை, வலுவாகிவிட்டது என்ற துணிவு பிறந்ததும். இதற்கான சான்றுகள்
வரலாற்றுச் சுவடிகளில் நிரமப உள்ளன. சுவடிகளைக்கூடப் புரட்டிக்கொண்டிருக்கத் தேவை
யில்லை, நம்மைச் சுற்றிலும்கூட அந்த நிலைமை இருந்திடக் காண்கிறோமே.

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கூடிக் குறைகளை எடுத்துக்கூறும் சுதந்திரம்,
கிளர்ச்சிச் சுதந்திரம் என்று மேடை அதிரப் பேசியவர்கள், ஆவம் கொந்தளிக்கப் பேசியவர்
கள், ஆர்வத்தை மற்றவர்களுக்கும் ஊட்டியவர்கள்தான், காங்கிரஸ் கட்சியினர். ஆனால்



அவர்களின் இன்றைய போக்கு? எந்த ஆதிக்கத்தையும் கொடுமையையும் எழுச்சியுடன் எதிர்த்து நின்றனரோ, அதே விதமான ஆதிக்கத்தையும் கொடுமையையும் கூசாமல், தட்டுத்தடங்கல் இல்லாமல் செய்திடக் காண்கின்றோமே! இந்த பதினெட்டு ஆண்டுகளில் அடக்குமுறையை எதிர்த்து நின்ற இந்த ஆற்றல் மிக்கோர், தடைச் சட்டங்களைத் தூளாக்கிய இந்த தீரர்கள், சிறைச்சாலை என்ன செய்யும் என்று சிந்துபாடிய இந்தச் சீலர்கள், வெள்ளையராட்சியிலே வீசப்பட்ட எந்த அடக்குமுறைக் கருவியைவிட்டு விட்டார்கள்? அதே குண்டாந்தடி; புதிதாகப் பித்தளைப் பூண் போட்டிருக்கிறார்கள். அதே துப்பாக்கிச்சனியன்; மாணவர்களின் மார்பினைக்கூடப் பதம்பார்க்கிறது; அதே குண்டுகள்; முன்பு விரட்டுவதற்கு; இப்போது சாகடிப்பதற்கு; அதே சிறை, அதே 144; அதேவிதமான அவசரச் சட்டங்கள், ஆள்தூக்கிச் சட்டங்கள், ஊரடங்குச் சட்டங்கள், உடைமையைப் பறிக்கும் சட்டங்கள்; நாடு கடத்தும் சட்டங்கள்; நாக்கறுப்புச் சட்டங்கள்!! ஒன்றுகூட விட்டுவிடவில்லை! ஆங்கில ஏகாதிபத்தியம் தனது பாசறையில் வைத்திருந்த கருவிகள் அனைத்தையும் இன்று காங்கிரசார், பயன்படுத்துகின்றனர்; உரிமைக்குரலை அடக்கிட; கிளர்ச்சிகளை ஒழித்திட!! வெள்ளையர்கள் கொண்டிடாத அளவு துணிவுடன், நம்பிக்கையுடன்!! ஆயினும் இவர்களேதான் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக ஆர்ப்பரித்தனர், அடக்குமுறை ஒழிக! அநியாயச் சட்டங்கள் ஒழிக! என்று.

எனவேதான் தம்பி! உரிமைக்காகப் போராடுவது, ஒரு தொடர் கதையாக, முடிவுபெறாத நீண்ட நெடுங்கதையாக இருந்து வருகிறது. விழிப்புடன் இருந்து வந்தாலன்றி, எழுச்சியுடன் இருந்துவந்தாலன்றி, ஆதிக்கம் ஓசைப்படாமல் மறுபடியும் இடம் பிடித்துக் கொண்டுவிடும்! கதிரவன் ஒளி நித்தநித்தம் தேவைப்படுகிறது அல்லவா, கப்பிக்கொண்டுள்ள இருளை நீக்கிட! அதுபோல! உரிமை வாழ்வினைப் பெற்றிட மனிதகுலம் ஓய்வின்றி உழைத்தபடி இருந்தாகவேண்டி வருகிறது.

அமெரிக்காவில் குடியேறியவர்கள், கொடுங்கோலர்களின் வழிவழி வந்தவர்கள் அல்லர்; கொடுங்கோலை எதிர்த்து நின்றவர்கள். எனினும் அவர்கள் தங்களைக் கொடுங்கோலர்களிடமிருந்து விடுவித்துக் கொண்டான பிறகு, தாமே கொடுமைகளைப் புரியத் தொடங்கிவிட்டனர்; அந்தக் கொடுமைகளை எதிர்த்து நிற்பவர்களை அழித்தொழிக்க, தமது வலிவினைப் பயன்படுத்தி வந்தனர். அந்தக் கொடுமையிலே ஒன்றுதான் நிறவெறி. இதனை எதிர்த்து நின்ற இயக்கங்கள் பலவற்றிலே ஒன்று டர்னரைட் இயக்கம். இந்த இயக்கம், பலாத்கார இயக்கமா, இரத்தவெறி கொண்டலையும் இயக்கமா என்பதனைக் கண்டறிய டக்ளஸ் டில்மன் நியமித்தவர், நிறவெறியை எதிர்த்து நின்ற மற்றோர் இயக்கத்தை நடத்திச் செல்பவர்.

பகைவனிடம் பஞ்சாங்கம் பார்ப்பது என்பார்களே அதுபோலல்லவா இருக்கிறது இது என்று எண்ணி, வெள்ளைப் பேரதிகாரிகள் ஆத்திரம கொண்டனர்.

டக்ளஸ் டில்மன், அமெரிக்கக் குடிஅரசுத் தலைவராவதற்கு முன்பு வசித்துவந்த வீட்டிலே, குடிஇருந்து வந்தார், ஒரு நண்பர். அவர், அமைதி பொறுமை, பொறுப்புணர்ச்சி, சட்டம் ஒழுங்குமுறை ஆகியவைகளுக்கு உட்பட்டு, நீக்ரோக்களின் உரிமைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் பணியாற்றி வர ஒரு அமைப்பு கண்டார். ஆனால் அந்த அமைப்பு, ஆற்றலற்றது, பிரச்சினையின் அடிப்படையைக் கவனிகக மறுப்பது, கைகூப்பியும் கண்ணீர் பொழிந்தும், கர்த்தரிடம முறையிட்டும் கருணையைக் கேட்டுப் பெற்றும் காரியமாற்றிட எண்ணிடும் கிழட்டுத்தனம் கொண்டது; ஆகவே அந்த அமைப்பு போதாது என்ற எண்ணம் கொண்டவர்கள், அமைதியுடன் பணியாற்றிவந்த அமைப்பிலிருந்து விலகி, புரட்சிகரமான, புதிய அமைப்பை ஏற்படுத்திக் கொண்டனர். அந்த அமைப்பின் பெயர்தான் டர்னரைட் இயக்கம் என்பது.

தீவிரம் நாடுவோர், புரட்சி முறை விரும்புவோர், புதிய விறுவிறுப்பு வேண்டுவோர், ஒவ்வோர் அமைப்பிலும் இருக்கத்தான் செய்வர். குருத்தோலைகள் பழுத்த ஓலைகளைக் கேலி செய்திட முனைவது விந்தை அல்ல; நடைமுறை. தம்பி! நான் குறிப்பிட்டேனே, வெள்ளையரைத தூக்கிலிடுவதாக நாடகம் நடத்திடும் விதமான புரட்சி இயக்கம், கிருத்தவ மார்க்கத்தையே உதறித் தள்ளிவிட்டு, புதிய மார்க்கத்தை மேற்கொண்ட இயககம், கருப்பு முஸ்லீம் இயக்கம்.

வெள்ளையர் நடுநடுங்க, கருப்பர் தலை நிமிர்ந்து நின்றிடச் செய்த இயககம், அதுவே, பிறகு மந்தமானதாக — பிற்போக்குத்தனமானதாக — கிழட்டுத்தனம் மேலிட்டு விட்டதாகக் கருதப்பட்டு, புதியதோர் அமைப்பு. கருப்பு தேசிய இயக்கம் என்ற பெயருடன், கருப்பு முஸ்லீம் எனும் அமைப்பிலே சட்டாம் பிள்ளையாக இருந்துவந்த மால்கோம் என்பவரால் துவக்கப்பட்டது.

கருப்பு முஸ்லீம் அமைப்பின் கர்த்தாவான எலிஜா முகம்மது வெள்ளையரிடம் மூளையை அடகுவைத்துவிட்டார், போராடும் இயல்பை இழந்துவிட்டார் என்று குற்றம் சாட்டிவிட்டு, புதிய அமைப்பைத் துவக்கிய மால்கோம், தனது இயக்கம். புரட்சிகரமானது என்பதனைக் காட்டிட, வெள்ளை இனத்தவரை வெறுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினர்; அதிலே பெரும் அளவு வெற்றியும் கண்டார்.

பண்பறிந்து ஒழுகுதல், பகைவனுக்கும் இறங்குதல், படிப்படியாக முன்னேறுதல், மனதை மாற்றுதல் என்பவைகள் கோழைகளின் முறைகள், இரத்தத்திற்கு இரத்தம்! கொடுமைக்குக் கொடுமை! பழிக்குப் பழி! என்பதே ஆற்றல் மிக்கோர் மேற்கொள்ள வேண்டிய முறை என்று எடுத்துக் கூறிய மால்கோம் எந்த அளவுக்கு வெறுப்பை ஒரு தத்துவமாக்கிக் கொண்டார் என்றுல், தம்பி! ஒரு விமான விபத்தில் 120 வெள்ளையர் இறந்துபட்ட ஒரு நிகழ்ச்சியை, அல்லாவின் அருளால் கிடைத்த அகமகிழ்ச்சி தரும் ஓர் நற்செய்தி எனறு அறிவித்திடும் அளவுககு!

இப்படி வெறுப்புணர்ச்சியை வளர்த்திடலாமா என்று கேட்டவர்களுக்கு மால்கோம், “தவறு என்ன! வெறுப்பை வெறுப்பதிலே தவறு என்ன! பல நூற்றுண்டுகளாக கொடுமைகளைச் செய்து குவித்துள்ள வெள்ளையர்மீது வெறுப்பு கொள்வது தர்மம்-நியாயம்!! என்று வாதிட்டாராம்.

வெள்ளையர்கள் எல்லோரும் பேய்கள் என்று கண்டிக்கிறீரே, அப்படியானுல் ஏசுநாதரும் பேய்தானு? என்று ஒருவர் கேட்டபோது, மால்கோம் தட்டாமல் தயங்காமல் பதிலளித்தாராம; “ஏசுநாதர் வெள்ளையர் என்று யாரய்யா உமக்குச் சொன்னுர்கள்? ஏசுநாதர் கருப்பர், வெள்ளையர் அல்ல என்று.

உலகிலே அவ்வப்போது உலவிய புகழ்மிக்கார் அனைவருமே கருப்பர்; வெள்ளையர் அல்ல என்று வாதாடினார் மால்கோம்.

கருப்பர், மனித இனத்திலேயே மட்டம், கர்த்தர் வெள்ளை மனிதர்களுக்கு உழைத்திடுவதற்கென்றே படைத்தார் மனித உருவு கொண்ட இந்த மிருகங்களை —என்று பேசிய வெள்ளைப் பாதிரிமார்கள் உண்டு! அந்த வெறியை அடக்கப் பிறந்த வெறி என்று கூற லாம் மால்கோம் போன்றார் ஊட்டிவிட்ட வெறுப் புணர்ச்சி.

இந்த வெறுப்புணர்ச்சி, கட்டு திட்டம், வரை முறை, சட்டம் ஒழுங்கு எனபவைகளை மதித்திடத்தக்க மனப்போக்கைத் துளியும் ஏற்படுத்தாதல்லவா? சுடு! இல்லையானால் சுடப்படுவாய்! கொல்லு! இல்லையானால், கொல்லப்படுவாய்! கொளுத்து! இல்லையானால் கொளுத் தப்பட்டுவிடுவாய்! வெட்டு! இல்லையானால் வெட்டப்படு வாய்! தட்டு! திறக்கமாட்டார்கள்! உடை! தன்னாலே வழி திறந்து காணப்படும்!! கேள்! கொடுக்கமாட்டார் கள்! பறித்துக் கொள், தடுத்திட இயலாது!! இந்தவித மான பலாத்காரம் வெடித்துக் கிளம்பிற்று.

உரிமை, சமத்துவம் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய்விட்டது; வெள்ளையர் நாட்டில் கருப்பருக்கு உரிமையும் சமத்துவமும்கிடைத்திடாது; ஓநாய்களுக்கு மத்தியில ஆடுகள் நிம்மதியாக வாழ்ந்திட முடியாது! ஆகவே, அமெரிக்காவில் ஒரு பகுதியை, ‘கருப்பர் நாடு’ என்று ஆக்கி அமைத்திடுக! அங்கு கருப்பர், தமது தேசியத்தை, தமது நெறியை அமைத்துக் கொள்வார் கள். அஃது இல்லையெனில், கருப்பர்—வெள்ளையர் பூசல் இருந்தபடியே இருக்கும்; புரட்சி பூத்தபடி இருக் கும்; இரத்தம் பீறிட்டுக் கிளம்பியபடிதான் இருக்கும்! என்று மால்கோம் போன்றார் முழக்கமிட்டனர். இந்த முழக்கம் வெள்ளையரின் மனதிலே அச்சத்தை மூட்டி விட்டது! இது அழிக்கப்பட வேண்டிய ஆபத்து என்று அலறினர். அப்படிப்பட்ட ஆபத்து இந்த டர்னரைட் இயக்கம் என்று விவரம் விளக்கம் அளித்து, அதனைத் தடைசெய்யும்படி பணித்தனர் வெள்ளைப் பேரதிகாரி கள்! குடிஅரசுத் தலைவராகிவிட்ட அந்தக் கருப்பரோ, காரணம் கண்டறியாமல், குற்றங்கள் மெய்ப்பிக்கப் படாமல், தடைசெய்ய முடியாது என்று கூறிவிட்டு, கருப்பரின் உரிமைக்காக ஒரு அமைப்பினை நடத்திக் கொண்டுவந்த தன் நண்பர் ஒருவரை, உண்மையைக் கண்டறிய நியமித்தார் என்றால், ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு கிளம்பாமலிருக்குமா! கொதித்தனர்! ஆனால் டில்மன் கலக்கம் கொள்ளவில்லை; மரியாதையாக, ஆனால் உறுதி தளராமல், பதிலளித்தார்.

தம்பி! டில்மன் காட்டிய அமைதிகலந்த உறுதி என் மனதை வெகுவாக ஈர்த்தது. பலன்தரத்தக்க, நீண்டகாலம் நிலைத்து நிற்கத்தக்க வெற்றியினை ஈட் டிட விரும்புவோர் எத்தகைய போக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான பாடம் பெற்றிடச் செய் கிறது டில்மன் காட்டிய உறுதி, கலங்காத தன்மை, வீண் வாதிடாமை, விளைவுபற்றி பீதிகொள்ளாமை, நேர்மை பிறழாமை ஆகிய இயல்புகள். எளிதாகப் பெற்றுவிடக்கூடிய இயல்புகளா அவை!!

வேறோர் ஏட்டிலே பார்த்தேன் தம்பி! டர்னர் என்ற கருப்பு இனத்தீரன் ஒருவனைப்பற்றிய விவரத்தை, இர்விங்வாலஸ் எழுதிய ‘மனிதன்’ என்ற ஏட்டில், டர்னரைட் இயக்கம் என்று குறிப்பிட்டிருக்கிறார்! டர்னர் என்ற புரட்சிக்காரரை நினைவிலேகொண்டுதான் வாலஸ் கருப்பரின் விடுதலை இயக்கத்துக்கு டர்னரைட் இயக்கம் என்று பெயரிட்டார் போலும்.

நான் படித்த மற்றோர் ஏட்டில், நாட் டர்னர் என்ற புரட்சியாளன்பற்றிய குறிப்பு, நெஞ்சினை உருக்குவ தாக அமைந்திருக்கிறது. அந்த ஏடு கதைப்புத்தகம் அல்ல! உண்மை நிகழ்ச்சிகளின் தொகுப்பு, கருப்பரின் விடுதலைக்காக ஆர்வத்துடன் பாடுபட்ட நாட் டர்னர் என்ற நீக்ரோ, 31-வயதினன் தூக்கிலே தொங்கவிடப் பட்டபோது. ‘கருப்பு வழிகாட்டி’ ஞானாசிரியன்; அவ தார புருஷன் என்றெல்லாம் புகழாரம் சூட்டினர், நீக்ரோ இனத்தவர்; வெள்ளை நீதிபதிகளோ அவன் கழுத்திலே சுருக்குக் கயிற்றினை வீசினர்! குடி, சூது, பொய், வஞ்சகம் எனும் எந்தவிதமான கெடுமதியும் அற்றவன் இந்த விடுதலைவீரன். இவன் மனதிலே கொழுந்துவிட்டு எரிந்துவந்தது ஒரே ஒரு ஆர்வம், நீக் ரோக்கள் விடுதலைபெறவேண்டும், நிறவெறி ஒழிய வேண்டும் என்பது.

நிறவெறி ஒழிய மறுத்தது; அதுகண்டு வெகுண் டெழுந்த நாட் டர்னர் நிறவெறியை விட மறுக்கும் வெள்ளையர்களை ஒழிப்பது என்று துணிந்தான், 1831-ம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்கள் 21-ம் நாள், புரட்சியை நடத்தினான். அவனுக்குத் துணைநின்றவர்கள் ஆறே ஆறுபேர்; துவக்கத்தில். பிறகோ வெள்ளையர்கள் வெடவெடக்கும் அளவுக்கு வளர்ந்தது பலாத்காரம். வெள்ளையர் வெட்டி வீழ்த்தப்பட்டனர்! பிடிபட்டான்! தூக்கிலிடப்பட்டான் டர்னர்!

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M.அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு • திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதா மிருதம், கதலிக்கல்ப்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

‘கருங்குரங்கு ரஸாயனம்’
மற்றும்
‘மதுகாசவம்’

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

# இந்தவாரம் இந்த நாட்டில்...



**புதுடில்லி, பிப். 25**—இந்தியா-பாக். இருநாட்டு எல்லைப் பகுதிகளிலும், போர் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த படைகள், தாஷ்கண்ட் ஒப்பந்த ஷரத்துப்படி இன்றுடன் முழுதுமாக வாபஸ் பெறப்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

**புதுடில்லி, பிப். 26**—ஜனாதிபதி உரைமீதான வாதத்தின்போது ஆசாரிய கிருபளானி, "உலகத்திலேயே இந்தியர்கள் பெரிய பிச்சைக்காரர்களாகிவிட்டது துரதிருஷ்ட வசமாகும்; இந்தியாவில் பிச்சை எடுப்பதை அவமானம் என்று கருதுவதில்லை; இதுவும் பரிதாபப்பட வேண்டியதாகும், என்றார்.

**சண்டிகார், பிப். 25**—பஞ்சாப் சர்வ கலாசாலைச் சட்டத் திருத்த மசோதா, தனிக் கமிட்டிப் பரிசிலனைக்கு விடவேண்டுமென்ற பிரேரணை, ஆளும் கட்சியான காங்கிரசாலேயே தோற்கடிக்கப்பட்டது; ஒரு மந்திரியே இதை எதிர்த்து ஓட்டுப் போட்டிருக்கிறார்.

**புதுடில்லி, பிப். 26**— அமைச்சர்கள் கருத்துக்கு மாறாக, திட்டக் கமிஷனில் விவசாயத் துறையில் பொறுப்பு வகிக்கும் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ், கூட்டுப் பண்ணை முறையால் விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியாது என்று கருத்தறிவித்திருக்கிறார்.

**சென்னை, பிப். 26**— சென்னை அரசின் புதிய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. புதிய வரி விதிப்புக்கள் எதுவுமில்லையென்றாலும், பொது மக்களின் தாழ்ந்திருக்கும்வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் அம்சங்கள் எதுவுமில்லையென்ற கருத்து பரவலாகக் கூறப்படுகிறது.

**புதுடில்லி, பிப். 27**—அந்நியஉதவியோ, மூலதனமோ பெறுவதில் தீங்கோ, இழிவோ கிடையாது என்றார் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி.

**ஜெய்ப்பூர், பிப். 27**— மே. வங்கத்தை அடுத்து, ராஜஸ்தான் அசெம்பிளியிலும் கூச்சல், குழப்பம் நடைபெற்று, கூட்டம் குழப்பத்தில் முடிவுற்றது,

**அமிர்தசரஸ், பிப். 28**—பஞ்சாபி சுபா பிரச்னை பற்றிய இந்திய அரசின் முடிவு மார்ச் இறுதியில் அல்லது ஏப்ரல் முதல் வாரத்தில் அறிவிக்கப்படும் என்று பிரதமர் இந்திரா காந்தி கேட்டுக்கொண்டபடி, சாந்த்பதேசிங், உண்ணா விரதம் அல்லது தீக்குளிப்புத் திட்டத்தை அதுவரையில் தள்ளிவைத்திருக்கிறார் என்று தெரிகிறது.

**சென்னை, பிப். 28**— அண்மையில் நடைபெறவிருக்கும் ராஜ்ய சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில், சுயேச்சை உறுப்பினராக ஆசார்ய கிருபளானி நிறுத்தப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**புதுடில்லி, மார்ச் 1**— இந்தியா - பாக். இரு நாட்டு அமைச்சர்கள் கூட்டம் ராவல்பிண்டியில் தொடங்கியது. பாக்.தரப்பினர் முதலாவதாக காஷ்மீர் பிரச்னையை வற்புறுத்துகிறார்களாம்!

டர்னர் கொல்லப்பட்டான்! ஆனால் அவன் நடத்திய பலாத்காரப் புரட்சியால் வெள்ளையர் மனதிலே மூண்டுவிட்ட பீதி மடிய ஆண்டு பல ஆயினவாம். எந்த நேரத்தில், எந்தப் பக்கம் இருந்து, எந்தக் கருப்பன் கிளம்பி, குத்திக்கொல்லுவானோ, வெட்டி வீழ்த்துவானோ, சுட்டுப் பொசுக்குவானோ என்ற பீதி.

டர்னர் தூக்கிலே போடப்பட்டு ஆண்டு இருபது கழிந்த பிறகும் அந்தப் பகுதி வெள்ளையர்கள் மனதில் அந்தப் பீதி இருந்து வந்ததாம்!

டர்னரைட் இயக்கம் என்ற உடன் வெள்ளையர்கள் மனதில் இந்த டர்னர்பற்றிய நினைவும், அதன் தொடர்பாக மருட்சியும் கிளம்பத்தானே செய்யும் எனவே டர்னரைட் இயக்கத்தைத் தடைசெய்ய டில்மன் மறுத்ததும் வெள்ளைப் பேரதிகாரிகள், அழிவை அரசபீடத்தில் அமர்த்திவிட்டோம் என்ற அச்சம்கொண்டனர்.

என்ன இருந்தாலும் டில்மன், கருப்புஇனமல்லவா! வெள்ளைப் பேரதிகாரிகள் எத்தனை வற்புறுத்தினாலும், நீக்ரோ இனத்துக்குத் துரோகம் இழைத்திட, சொந்த இனத்தைக் காட்டிக்கொடுக்க மனம் வருமா! தனது இரத்தத்தின் இரத்தம்! சதையின் சதை! தனது இனம்! அந்த நீக்ரோ இனம் தன்மானத்துடன் வாழ்ந்திட உழைத்துவரும் ஒரு இயக்கத்தை ஒழித்துக்கட்ட டில்மன் எப்படி ஒப்புவார்! நிமிர்ந்து நின்று மறுத்துவிட்டார்! அது அல்லவா வீரம்!! அவனல்லவா மனிதன்! பதவிகொடுத்து, பக்கம் நின்று பசப்பு காட்டி பணியவைத்திடலாம் என்று எண்ணினர் போலும். டில்மன் பதவிகண்டு பல்லிளிப்பவன் அல்ல! அறிவு மிக்கோன்! ஆற்றல்மிக்கோன! இனப்பற்றுகொண்டோன்! ஆகவேதான், டர்னரைட் இயக்கத்திற்குத் தடை விதிக்க மறுத்துவிட்டான் என்று நீக்ரோ இனத்தவர் எண்ணிக் களிப்புற்றனர்.

டில்மன், நிறப்பற்று இனப்பற்று காரணமாக இந்த முடிவினை மேற்கொள்ளவில்லை. வீண் பழி சுமத்தி ஒரு அமைப்பை ஒடுக்குவது நியாயமாகாது, நேர்வழி அல்ல, சட்டம் தந்துள்ள அடிப்படை உரிமைகளை அழித்திடும் செயலினை மேற்கொள்ளலாகாது என்பதனால் அந்த முடிவினை மேற்கொண்டார். டில்மனுடைய இந்த நேர்மை உணர்ச்சியினை கருப்பர்—வெள்ளையர் எனும் இருசாராருமே உணரவில்லை.

கருப்பர் உலகு களிப்பினையும் வெள்ளையர் உலகு வெறுப்புடன் கலந்த கோபத்தினையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தபோது, டர்னரைட் இயக்கம் உள்ளபடி பலாத்காரத்தில் ஈடுபட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துவிடுகின்றன. கிடைத்ததும் டில்மன், டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்திட முடிவுசெய்துவிடுகிறான்.

தக்க காரணமின்றி இயக்கத்தைத் தடை செய்ய முடியாது என்று கூறியபோது எப்படி வெள்ளை இனத்தவர் கொதிப்படைவார்களோ என்பது பற்றிக் கவலையற்று, மனச்சாட்சிக்கு மட்டுமே மதிப்பளித்து நடந்துகொண்டாரோ, அதே விதமாகவே, அந்த இயக்கம் பலாத்காரச் செயல்களிலே ஈடுபட்டிருக்கிறது என்பது மெய்ப்பிக்கப்பட்டதும், அதனைத் தடை செய்தால், கருப்பு இனத்தவர் தன்னைத் தூற்றுவார்களே, வெறுப்பார்களே, எதிர்ப்பார்களே என்ற கவலையற்று, நேர்மையாக நடந்துகொள்ள முற்பட்டார். தம்பி! இதற்குத் தேவைப்படும் நெஞ்சு உரம் பொதுப்பணியினில் ஈடு

பட்டுள்ளோர் அனைவரும் முயற்சி செய்து பெற்றுக் கொண்டாக வேண்டிய ஒன்றாகும்.

கடமையைச் செய்திடும்போது, இனப்பற்று, பந்தபாசம், அச்சம், தயை தாட்சணியம் என்பவைகளுக்குக் கட்டுப்படும்போக்கு தலைதூக்குமானால், அதனைத் தூக்கி எறிந்துவிடும் துணிவு பிறந்திடவேண்டும்.

எந்த நீக்ரோ இனத்தவர் போற்றிப் புகழ்கிறார்களோ, எமது ஈடு எதிர்ப்பற்ற தலைவன்! எமது இனத்தின் காவலன்! வெள்ளையரின் மிரட்டலுக்குப் பணிந்திடாத அஞ்சா நெஞ்சன்! என்றெல்லாம் புகழாரம் சூட்டுகிறார்களோ, அவர்கள் கண்ணீர் ததும்பிட நிற்பார்களே, இவ்வளவுதானா இவன் ஆற்றல்? என்று கேலி பேசுவார்களே; அடிபணிந்துவிட்டாயா வெள்ளையருக்கு! பதவிமோகம் தலைக்கேறிவிட்டதா! இனம் அழிந்தாலும் சரி, வெள்ளை மாளிகையில் கொலுவிருக்கும் நிலை இருந்தால்போதும் என்று தீர்மானித்து விட்டானா! காவலன் என்றும் நாவலன் என்றும், வழிகாட்டி என்றும் புது வாழ்வளித்தோன் என்றும் வாய்வலிக்கப் போற்றிக் கிடந்தோமே! கருப்பரின் போற்றுதல் கால் தூசு; வெள்ளையரின் நேசமே பெரிது என்று கருதிவிட்டானா! வெற்றிபெற்றுவிட்டார்களா வெள்ளை நிற வெறியர்! கருப்பனைக்கொண்டே கருப்பரை அழிக்கும் காரியத்தை நடத்திக் காட்டுகின்றனரா, காலமெல்லாம் நம்மைக் கொடுமை செய்து வரும் காதகர்கள்! வெள்ளை மாளிகையிலே ஒரு கருப்பர்! அடிமை இனத்தவன் அமெரிக்கக் குடி அரசுத் தலைவன் என்றுகூறிக் கூறிப் பூரித்துக் கிடந்தோமே! இதற்குத்தானா! இவன் வெள்ளை மாளிகையில் அதிபர் வேலை பார்க்கச்சென்றது, தனது இனத்தை அழித்திடத்தானா! கேட்பார் இல்லை என்ற நிலை போய்விட்டது நமது இனத்தவனே அரசாள்கிறான் என்று பெருமிதம் கொண்டோமே! அடிமை இனம், எதற்கும் தகுதியற்ற கூட்டம், என்றெல்லாம் ஏசிவந்தீர்களே, வெள்ளை இனத்தவரே! பார்த்தீர்களா, வெள்ளை மாளிகையை!! யார் அங்கே வீற்றிருக்கிறார் தெரிகிறதா? ஒரு கருப்பர்! ஒரு நீக்ரோ! எங்கள் இனமணி! இப்போதாவது புரிகிறதா நீக்ரோ இனத்தின் பெருமை! இனியாகிலும் உம்முடைய மனதிலிருந்து ஒழியுமா நிறத்திமிர்; இனப் பகை!—என்றெல்லாம் எக்களிப்புடன் பேசி வந்த தன் இன மக்கள்—நீக்ரோ மக்கள்—டர்னரைட் இயக்கத்தைத் தடைசெய்திட முனைவது கண்டால்; பதறிப் போவார்களே, பயந்துவிடுவார்களே, பாதகா! என்று அலறிக் கூவித்துடிப்பார்களே! இனத்துரோகி என்று ஏசுவார்களே என்றெல்லாம் எண்ணி டில்மன் மனக் குழப்பம் அடையவில்லை.

வெகுண்டு எழுபவர் எவராக இருப்பின் என்ன! அவர் நிறம் எதுவாக இருப்பின் என்ன! எனக்குக் கட்டளை பிறப்பிக்கக் கருப்பருக்கும் உரிமை இல்லை; வெள்ளையருக்கும் இல்லை. என் உள்ளம் எனக்குக் கட்டளை பிறப்பிக்கிறது; தூற்றுவோர் தூற்றட்டும்; நான் என் கடமையைச் செய்திடுவேன் என்று துணிந்து நின்றான்.

தம்பி! உள்ள உறுதியுடன் நேர்மை வழி நடந்திட டில்மன் முற்பட்டபோது ஏற்பட்ட இன்னலையும் இழிவையும் படிக்கும்போது, உள்ளபடி மனம் உருகிடும்! அத்தனை இழிவுகளைத் தாங்கிக்கொள்ள முடிந்ததே அந்த நேர்மையாளனால், நம்மால் முடியுமா, நமக்கு அத்தகைய உள்ள உரம் இருந்திடுமா என்று பொதுப் பணியினில் ஈடுபட்டுள்ளோர் ஒவ்வொருவரும் எண்

## இந்த வாரம் வெளிநாட்டில்...



**லாகோஸ், பிப். 25—** கானா நாட்டில் ராணுவமும், போலீசும் புரட்சி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டன. அதிபர் நக்ருமா பதவியிலிருந்து விரட்டப்பட்டார். இப்புரட்சி நடந்தபோது நக்ருமா, பீகிங்கில் பிரமாண்டமான ஒரு வரவேற்பில் கலந்துகொண்டதும், அடுத்த 24 மணி நேரத்தில் அதே சீனாவால் கைவிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

**பெய்ரூட், பிப். 25—** சிரியாவில் நடைபெற்ற புரட்சி காரணமாக 400-க்கும் அதிகமானவர்கள் பலியானார்கள் என்றும், ஜனாதிபதியின் இரு குழந்தைகளும் கோரமாகக் கொலை செய்யப்பட்டார்கள் என்றும் தெரிகிறது.

**ராவல்பிண்டி, பிப். 26—** அமெரிக்க உதவி தொடர்பாக, கராச்சியிலுள்ள யு. எஸ். தூதரகம் வெளியிட்ட ஒரு அறிக்கை தவறானது என்று அமெரிக்க உதவி ஜனாதிபதி ஹம்ப்ரே மறுத்து விட்டார்.

**நியூயார்க். பிப். 26—** வியட்நாம் தொடர்பில், அமெரிக்காவின் பங்கு ஒரு வரையறைக்கு உட்பட்டதுதானென்றும், அது பரவலாகவோ இன்னும் பரவவோ தான் அனுமதிக்க முடியாது என்றும் ஜனாதிபதி ஜான்சன் அறிவித்தார்.

**ரோம், பிப். 27—** கானா புரட்சி தொடர்பாக, ரஷ்யாவுக்குச் சென்றுவிட்ட நக்ருமா மீண்டும் கானாவுக்குத் திரும்பினால், தண்டனைக்குள்ளாவார் என்றும், இப்புரட்சிக்குக்கடந்த 1961-லிருந்தே திட்டமிட்டு வந்ததாகவும் முன்னாள் ரகசியப் போலீஸ் தலைவர் அமாஹியா அறிவித்தார்.

**கெய்ரோ, பிப். 28—** சீன அரசின் வெளிநாட்டுக் கொள்கைக்கு அடிமேல் அடி கிடைத்துவருவதாகத் தெரிகிறது. பல நாடுகள் சீனத்தொடர்பிலிருந்து துண்டித்துக்கொண்டு வருகின்றன. அண்மையில் கானாவில் ஏற்பட்ட ராணுவப் புரட்சி காரணமாக, கானாவிலிருந்துகொண்டு கொரில்லாப் போர் பயிற்சிக் கொடுத்துக் கொண்டிருந்த 13 சீனர்களை புரட்சிக் குழு. நாடு கடத்தி விட்டதாகவும், நாடு கடத்தப்பட்ட அவர்கள் கெய்ரோவுக்கு வந்து சேர்ந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**வாஷிங்டன், பிப். 28—** பாகிஸ்தானில் உள்நாட்டுக் குழப்பத்தைத் தவிர்க்கும்பொருட்டு, தாஷ்கண்ட் ஒப்பந்தம் அடிப்படையில், இரு நாடுகளும் தத்தம் நிலைகளிலிருந்து படைகளை வாபஸ் பெறுகின்ற செய்தியை பாக். இருட்டடிப்புச் செய்து வருவதாகவும், ஆனாலும் பாக். ஒப்பந்தப்படி படைகளை வாபஸ் பெற்றுக்கொண்டு விட்டது என்றும் அமெரிக்கப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

**வாஷிங்டன், மார்ச் 2—** யு. எஸ். ஜனாதிபதி ஜான்சனை இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, இம்மாதம் 28, 29-ம் நாட்களில் வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசுவார் என்று ஜனாதிபதி மாளிகை பேச்சாளர் அறிவித்துள்ளார்.

ளிடுவர்; அந்தவிதமாக அமைந்திருக்கிறது, அந்தக் கட்டம்! இழிவும இன்னலும் தாக்கிடும் கட்டம்.

அழுகல் முட்டைகள் வீசப்படுகின்றன! கற்கள் பறக்கின்றன! காட்டுக் கூச்சல் கிளம்புகிறது! பேசாதே! போ வெளியே! துரோகி! காட்டிக் கொடுக்கும் கயவனே! என்று மூலைக்கு மூலை கண்டன ஒலி! தாக்கிடத் துணிந்தோர், அருகே நெருங்குகிறார்கள்! என்னென்ன ஆபத்து வருமோ என்று எண்ணத்தக்க விதமான பரபரப்பு! போலீசும் படையினரும் வளையம் அமைத்து, உயிருக்கு ஆபத்து வராமல் பாதுகாக்க வேண்டி நேரிடுகிறது. போய்விடலாம்! நிலைமை மோசமாவதற்குள் இந்த இடத்தை விட்டுப் போய்விடலாம்! இந்தக் கும்பல் எதற்கும் அஞ்சாது! கொலைகாரக் கூட்டம! வெறி தலைக்கேறிவிட்டிருக்கிறது! அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர், அடித்துக் கொல்லப்பட்டார் ஆத்திரமடைந்த கும்பலால் என்று ஏற்பட்டுவிடுமானால் அது நாட்டுக்கே பெரிய அவமானம்; துடைக்கப்பட முடியாத கறை! என்றெல்லாம்கூறுகிறார்கள். டில்மனை, பாதுகாப்பான இடத்திற்குப் போலீசார் அழைத்துச் செல்கின்றனர்.

டர்னரைட் இயக்கம், பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது என்பது மெய்ப்பிக்கப்பட்டிருப்பதால், அந்த இயக்கத்தைத் தடைசெய்யும் சட்டம் பிறப்பித்துள்ளேன்—என்று டில்மன் அறிவித்ததும் இத்தனை அமளி நடக்கிறது. குடிஅரசுத் தலைவர் உரை கேட்டு மகிழவும், அவரை வாழ்த்தவும் கூடியிருந்த பெருந்திரள், பகை கக்குகிறது, பாய்ந்துவருகிறது தாக்க! போலீஸ் மும்முரமாகிறது. விழா நடத்திட முனைந்த பிரமுகர்கள் பீதி கொள்கின்றனர். மகன் கண்களில் நீர் கொப்பளிக்க நிற்கிறான்! டில்மன் போலீஸ் வளையத்திலே நிறுத்தப்பட்டு பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்.

தம்பி! இத்தனை அமளியும் நடப்பதே ஒருவர் மனதை மெத்தவும் வாட்டிவிடும்.

அதிலும் வரவேற்று வாழ்த்தி, விழா நடத்துகிறார்கள்; அந்த இடத்தில் அந்த நேரத்தில் அமளி! 'கல் லெறி! காட்டுக்கூச்சல்! இழிமொழிகள்! பழிச்சொற்கள்!! என்றால் மனவேதனை மேலும் எந்த அளவு ஏற்படும்.

அதிலும், எந்தத் தகப்பன் இத்தனைப் பெரிய ஏற்றம் பெற்றிருக்கிறான் என்பது கண்டு பெருமிதம் கொண்டிருக்கிறானோ அந்த மகன் எதிரில் இந்த அமளி நடக்கிறது.

தந்தை வரவேற்கப்படுவதைக் கண்டு களித்த கண்களால், ஆத்திரமடைந்த கூட்டம் அவரை விரட்டி அடிப்பதைக் காண்கிறான் - டில்மனுடைய மகன்-கல்லூரி மாணவன்!

தன் தந்தையுடைய வருகை காரணமாக விழாக் கோலம் எழக்கண்டு களிப்படைந்திருக்கிறான்-மகன்-அவன் எதிரில் கல்லெறி!-தந்தைக்கு!

நீக்ரோ இனத்தின் பெருமையை உயர்த்திய தலைவன்! என்று தன் தந்தையைச் சான்றோர் வாழ்த்திடக் கேட்டான் களிப்புடன்-மகன்-அதே காதுகளில் நாராசம் பாய்கிறது.

தந்தை விழாக்கூடம் நுழையும்போது எத்தனை மரியாதை, என்னவிதமான அணிவகுப்பு, பிரமுகர்கள் முகமன்! இவைகளைக் கண்டான். அதே இடத்தில், அல்லோலகல்லோலம்! விடாதே! பிடி! அடி! குத்து! கொல்லு! என்ற மிரட்டல்! மாலைகள் அணிவித்தார்கள் அந்த மணிமாடத்தில் தந்தைக்கு! கற்களை வீசுகிறார்கள் அதே இடத்தில். காண்கிறான், கண்ணீர் உகுக்கிறான், ஆனால் அடப்பாவிகளே! ஆகுமா இந்த அக்ரமம்! அவரையா இப்படி இழிவு செய்கிறீர்கள். நமது இனத் தலைவனையா தாக்கக் கிளம்புகிறீர்கள என்று அந்த மகனால் கேட்க முடியவில்லை ஏன்? டர்னரைட் இயககத்தை—கருப்பரின் பாதுகாவலனாக உள்ள அமைப்பை—ஒரு கருப்பரே தடை செய்யும் போது, இதுவும் நடக்கும் இதற்கு மேலும் நடக்கும் என்று எண்ணுகிறான்! தந்தைக்கு ஏற்பட்ட இழிவு கண்டு தத்தளிக்கிறான்; ஆனால் அவர் டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்தது நியாயம் என்று அவன் உள்ளம் ஏற்றுக் கொள்ள மறுத்தது. அவன் கல் வீசவில்லை, கண்டனக் குரல் எழுப்பவில்லை; ஆனால் கல் வீசியவர்களும் கண்டனக் குரல் எழுப்பியவர்களும், என்ன கேள்வியை எழுப்பினார்களோ அதே கேள்வியைத்தான் அவனுடைய கண்ணீர் எழுப்பிற்று.

டர்னரைட் இயக்கத்திற்குத் தடைவிதிப்பதாக, டில்மன் வெள்ளை மாளிகையில் இருந்தபடியே அறிவித்திருக்கலாம். அமளி செய்திடும் கூட்டம் அருகே நெருங்கியிருக்கமுடியாது. அழுகல் முட்டைகள் வீசிடக் கும்பலுக்கு முடிந்திருக்காது.


தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

# ஜெயா பார்மஸி

## ஆயுர்வேத வைத்தியசாலை

**H. O. பெரியகுளம்**

எங்களது பார்மஸியில் உற்பத்தியாகும்

**ஆஸவங்கள் அரிஷ்டங்களும்**

விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை.
போதுமான கமிஷன் கொடுக்கப்படும்.

N. B:— எங்கள் பார்மஸி சர்க்காரால் (*Recognised by Central Board of Indigenous Madicine Madras.*) அங்கீகரிக்கப்பட்டது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

திண்டுக்கல் பிராஞ்சில் தொடர்புகொள்க:

உரிமையாளர்: **J. M. ராஜன்**

ஜெயா பார்மஸி

6, நேருஜிநகர், மதுரைரோடு, திண்டுக்கல்.
PHONE: 348, 348-A, 438

## கண்ணோட்டம்!

கடந்த மூன்று ஆண்டுகளில் மத்தியக் கல்வித் துறை, இந்தி மொழி வளர்ச்சிக்காகச் செலவழித்துள்ள தொகை ரூ. 4 கோடியே 65 இலட்சத்து 26 ஆருயிரம் ரூபாயாம்!"

ஆனல் இதே காலத்தில் மற்ற தேசிய மொழிகளுக்குச் செலவழிக்கப்பட்டுள்ள தொகை ரூ 21 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய்கள் மட்டுமே.

ஆனல் டில்மன், தடைச்சட்டம்பற்றிய அறிவிப்பு அளிததது, மகன் பயிலும் கல்லூரியில் நடைபெற்ற விழாவில்!

கல்லூரி விழாவில் ஒரு நீக்ரோ தலைவர் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டதே, இதற்குமுன்பு நடைபெற்றிராத ஒரு சிறப்பு நிகழ்ச்சி. அந்த விழாவிலே கலந்துகொண்டு, டில்மன் டர்னரைட் இயக்கத்தின்மீது தடைவிதிததிருப்பதாக அறிவத்ததும், விழாக்கூடம் அமளிக் களமாகிவிட்டது.

எந்த இடத்தில் இதற்கு எதிர்ப்பு வெடித்துக் கொண்டு கிளம்பக்கூடுமோ அந்த இடமாகப்பாாத்தே, சட்டம்பற்றி அறிவிக்கவேண்டும் என்ற எண்ணம் போலும் டில்மனுக்கு.

அமளிகண்டு மகன் கண்ணீர் சிந்துகிருன். வெள்ளையர்? எப்படி இருக்கமுடியும்? ஒரு கேலிப்புனனகை காட்டி இருப்பர்! மகத்தான வெற்றி என்று எண்ணிக் கொண்டிருப்பர்! குறும்புப் பார்வையைச செலுத்தி இருப்பர்.

கருப்பர் தலைவனை எதிர்த்துக் கருப்பர் கூட்டம் அமளிசெய்கிறது. வெள்ளைப்போலீஸ் அந்தக் கருப்புத் தலைவன் உயிருக்கு ஆபத்து வராதபடி பாதுகாப்பளிக்கிறது. இந்த வேதனை தரும் காட்சியைக் காணவா, நான இந்தக் கல்லூரியில் இருக்கவேண்டும் என்று எண்ணி, டில்மனுடைய மகன் வேதனைப்படாமல் இருந்திருக்க முடியுமா?

நிறவெறிகொண்ட வெள்ளையர் என்ன பேசிக கொண்டிருந்திருப்பர்!

புயல் வீசுகிறது! நிலைமை புரிந்திருக்கும்.


புயல் இப்போதுதான் ஆரம்பமாகி இருக்கிறது. போகப் போகத் தெரியும் அதனுடைய வேகம்.

கருப்பரின அமைப்பை ஒரு கருப்பர் தலைவன் தடை செய்யும்போதே இத்தனை அமளி நடக்கிறதே, வெள்ளை இனத்தவர் தடைச் சட்டம் கொண்டுவந்திருந்தால், பயல்கள் தலையையே சீவிவிட்டிருப்பார்கள் போலிருக்கிறதே!

தலையைச் சீவுவார்களா! யார்? கருப்பரா! பீரங்கிகள் எதற்கு இருக்கின்றன, அகன்ற வாயுடன். ஒரு வெள்ளை இனத்தவன் மீது இந்த அழுகல் முட்டை விழுந்திருந்தால், கருப்புக் கும்பலின் மீது குண்டுகள் பொழிந்திருக்காதா. சும்மாவிடுமா படை!

நடைபெற்ற குழப்பம், அமளி டில்மன் மனதை வாட்டாமலிருந்திருக்க முடியாது. ஆனல் கடமையைச செய்தோம்; புரிந்துகொள்ளாதவர்கள் பகைக்கிருர்கள். அதற்காகக் கடமையிலிருந்து தவறலாமா? கூடாது! என்றுதான் எண்ணியிருப்பான். புயல் அந்த அளவோடு நின்றுவிடவில்லை. அதன் வேகம்பற்றியும் வகைபற்றியும் அடுத்த கிழமை தெரிவிக்கிறேன்.

அண்ணன்,



அறிக்கை:—

## "காஞ்சி"

| | |
|---|---|
| 1 வெளியாகும் இடம் | ...86, திருக்கச்சிநம்பி தெரு, சின்ன காஞ்சிபுரம். |
| 2. வெளியிடும் நாட்கள் | ...வாரம் ஒருமுறை |
| 3. அச்சிடுபவர் பெயர் | ...சி. என். ஏ. இளங்கோவன் |
| இனம் | ...திராவிடர் |
| முகவரி | ...86 திருக்கச்சிநம்பி தெரு, சின்ன காஞ்சிபுரம். |
| 4. வெளியிடுபவர் பெயர் | ...சி. என். ஏ. இளங்கோவன் |
| இனம் | ...திராவிடர் |
| முகவரி | ...86, திருக்கச்சிநம்பி தெரு சின்ன காஞ்சிபுரம் |
| 5. ஆசிரியர் பெயர் | ...சி. என். அண்ணுதுரை |
| இனம் | ...திராவிடர் |
| முகவரி | ...54, வரகுவாசல் தெரு, சின்ன காஞ்சிபுரம். |
| 6. பத்திரிகையின் உரிமையாளர்களுடைய பெயர்களுமமுகவரியும அல்லதுபத்திரிகையில் ஒரு சதவிகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவர்களின பெயர்களும்முகவரியும் | சி. என். ஏ இளங்கோவன் 86, திருக்கசசிநம்பி தெரு. சினன காஞ்சிபுரம். |

என் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்தமட்டில் மேலே கொடுககபபட்டுள்ள விபரங்கள் யாவும் உணமையானவை எனறு சி என். ஏ. இளங்கோவனுகிய நான் அறிவிக்கிறேன.

6-3-66 (ஒப்பம்) சி. என். ஏ. இளங்கோவன்,
வெளியிடுவோர்.

# பாண்டியன் திருமேனி

"இன்னும் சில நாட்கள் கழித்தே நாம் மதுரைமீது படையெடுக்க வேண்டும்" என்ற ஆளவந்தாரின் பதிலைக் கேட்டு, அதிர்ச்சியடைந்த குலசேகரன் படைத்தலைவரைப் பார்த்து, "அந்தக் கயவனின் ஆட்கள் நம் ஊர்களைச் சூறையாடுகிறார்கள் — தீயிட்டுச் சாம்பலாக்குகிறார்கள், படைத்தலைவரே..." என்றான்.

"அவ்வளவுதானே அரசே?"

"படைத் தலைவரே, உமது அமைதியான பேச்சு..."

"உள்ளத்துப் புண்ணை வேல் கொண்டு குத்துவதைப்போலிருக்கும்! பராக்கிரம பாண்டியன் சாதாரணமானவன் அல்ல, அரசே! அவனை நன்றாக அறிந்தவன் நான்! ஆகவே இன்னும் சில நாட்கள் நாம் மௌனமாக இருந்தால், அந்த அவசரககாரனுக்கு எவ்வளவு பலம் இருக்கிறது என்பதை, நாம் அறிந்துகொள்ள இயலும்!"

"வாய்மூடி இன்னும் சில நாட்கள் நாம் சுமமா இருந்தால், வாளும் வேலும் ஏந்திய அவனது படைகள் திருநெல்வேலியினுள் புகுந்து விடும்!"

"திருநெல்வேலியைத் தாக்குமளவிற்கு அவனிடம் பலமிருந்திருந்தால், அவனது ஆட்கள் கோழைகளைப்போல, நிராயுதபாணிகளான கிராம மக்களின்மீது பாய்ந்திருக்க மாட்டார்கள்! ஏதேதோ திட்டமிட்டு வேலைசெய்யும் பராக்கிரமன், இந்தச் செய்கையின் மூலம் தனது முட்டாள் தனததை வெளிக் காட்டிவிட்டான். அவனது அறியாமையை மட்டுமலல, அவனது படைபலத்தைக்கூட இதிலிருந்து நாம யூகிததுக் கொளள முடிகறது! அவனுககுப் படை பலம் அதிகம இருநதிருநதால், இத்தகைய கோழைச் செயலில் அவன ஒருபோதும் இறங்கியருககமாட்டான! இன்னும சில நாட்கள் நாம் பொறுத்தால, அவனுக்குள்ள சேனையின மதிப்பை ஓா அளவிற்குத் தெரிந்துகொள்ள முடியும்! தென் வடபாண்டி நாடுகளுக்கிடையே நடைபெறப் போகும் இந்தப் போரில்— அவன் வெறும் படைபலத்தை மட்டும் நம்பியிருப்பதாகத் தெரியவில்லை! ஏதோ சூது செய்தே, திருநெல்வேலியை அபகரிக்க அவன் திட்டமிடுவதாகத் தெரிகிறது! இல்லை என்றால், எல்லைப்புறக் கிராமங்களின்மீது அவன் நாட்டம் சென்றிருக்காது. அரசே! அவன் கையாளப் போகும் சூழ்ச்சி என்ன என்பதை அறிந்துகொள்ள வேண்டியது அவசியத்திலும் அவசியம்! இந்தவிதமாகப் பராக்கிரமனின் திட்டங்களைப் புரிந்துகொண்டு அதன் பிறகு மதுரைமீது படை எடுத்துச் சென்று, ஒரே நாளில் அவனைத் தங்கள் தாள் பணியும்படிச் செய்கிறேன் வேந்தே!"

"படைத்தலைவரே, உமது அறிவின் நுட்பத்தை மெச்சுகிறேன்."

படைத் தலைவர் ஆளவந்தார் சென்றுவிட்ட பிறகு, அந்தப்புறத்திற்குப் போய் குழந்தை விக்கிரமனைப் பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு, ஆசனத்தை விட்டெழுந்தான், குலசேகரன்.

கே.ஜி.இராதாமணாளன்

"அரசே! கொங்கு நாட்டிலிருந்து போர்வீரன் ஒருவன் வந்திருக்கிறான். —தங்களைக் காணவேணடுமாம்!" என்று உள்ளேவந்த சேவகன் கூறியதும, "சரி வரச்சொல்!" என்றான அரசன்.

"என்ன செய்தி?" என்று வணங்கி நின்ற கொங்கு நாட்டுப் போர்வீரனைப் பார்தது, ஆர்வத்தோடு குலசேகரன் கேட்டான.

"எங்கள் மன்னர்பிரான், இந்த நவமணித்தேரை, இளவரசர் விககிரமனுக்குத தருமபடி அனுப்பினார்."

"அரசர் அனுப்பினரா இநத நவமணித தேரை?"

"ஆமாம், வேந்தே!"

"உணமையாகவா?"

"தங்கள் ஆச்சரியத்தின் பொருளை என்னால்அறிந்துகொள்ள முடியவில்லையே?"

"அவர்மிகவும் நோய்வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாகக் கிடக்கிறார் என்று இரண்டு நாட்களுக்கு முன்னர்தானே இங்கு ஓலை வந்தது?"

"வியப்பாக இருக்கிறதே! அரசருக்கு உடல் நலம் சரியில்லையா! ஓலை வந்ததா! எமது வேந்தர் பூர்ண நலத்தோடு இருக்கிறார்! அது ஏதோ பொய் ஓலையாக இருக்கவேண்டும் மன்னவா, பொய் ஓலையாக இருக்க வேண்டும்!" என்று அந்தக் கொங்குநாட்டுப் போர்வீரன் கூறியதும், குலசேகரனின் மனம் திடுக்கிட்டது.

## பதினாலாம் பகுதி
## கண்ணிழந்தான்

'பொய் ஓலை!' என்று மன்னன் குலசேகரன் பெருமூச்சுவிட்டபடி உதட்டைக் கடித்துக்கொண்டே கூறினான்.

அவனது நினைவு சுழன்றது. வாழ்க்கையில் ஏதோ பெரிய ஆபத்து — இதயம் பிளக்கும் இன்னல்—நேரிடப்போகிறது போனற ஓர் அச்சம், அவன் உள்ளத்தைப் பதைபதைக்கச் செய்தது.

'பராக்கிரமன் ஏதோ சூதுசெய்துவிட்டான்! அவனது வஞ்சக வலையில் நான் சிக்கிவிட்டேன்-அய்யோ சிக்கிவிட்டேன்!' என்று முணுமுணுத்தவாறு கோபமும், சோகமும் வாட்டும இதயத்தோடு, இப்படியும் அப்படியும் உலவ ஆரம்பித்தான்.

'யார் அங்கே?'

அரசனின் குரலைக் கேட்டதும், உள்ளே ஓடிவந்தான் ஒரு சேவகன்.

'படைத்தலைவர் ஆளவந்தாரை அழைத்துவா! அவசரமென்று சொல்!' என்று அரசன சொல்லி முடிப்பதற்குள் ஆளவந்தாரே அங்கே வந்து நின்றார்.

'படைத் தலைவரே! உம்மை அழைத்து வரும்படிதான் இப்பொழுது சொல்லிக்கொண்டிருந்தேன்!'

'பெரிய மோசம் நடந்துவிட்டது வேந்தே, பெரிய மோசம் நடந்துவிட்டது, என்று சோகத்தோடு சொல்லியபடி — தலைகுனிந்து நின்றார்—ஆளவந்தார்.

'கொங்கு நாட்டிலிருந்து போர் வீரன் ஒருவன் வந்திருக்கிறான்! மாமாவிற்கு எந்த நோயுமில்லையாம் —சுகமாகவே இருக்கிறாராம்!'

'கொங்கு நாட்டிலிருந்தா வந்திருக்கிறான்?'

'இதென்ன இப்படிக் கேட்கிறீர்? அவன் வந்திருப்பது தங்களுக்குத் தெரியாதா? பெரிய மோசம் நடந்துவிட்டது என்றீரே — அது வேறு எதைக்குறித்து? ஏன், படைத் தலைவரே, பார்வையை உயர்த்தமாட்டேன் என்கிறீர்? என்ன நடந்தது சொல்லுங்கள்! பாராக்கிரமனின் படைகள், திருநெல்வேலியை நோக்கி விரைந்து வருகின்றனவா?'

"இந்தச் சோகத்திலும் என்னைச் சிரிக்கச் செய்கிறது, தங்கள் கேள்வி! அந்தக் கயவன் படைகளோடு வருகிறான் என்ற செய்தி கிடைத்திருந்தால், மான் கூட்டத்தின் வருகையை அறிந்த சிங்கத்தைப்போலல்லவா சித்த மகிழ்வோடு இருப்பேன்!"

'பிறகு தங்கள் சோகத்தின் பொருள்?'

'அவன் ஏதோ சூழ்ச்சி செய்ய நினைக்கிறான் என்று சொன்னேனே —செய்துவிட்டான் அரசே-செய்துவிட்டான், சூழ்ச்சி!'

"ஆமாம் படைத்தலைவரே, அவனது பொய் ஓலையை உண்மை என்று நம்பி, காஞ்சனாவையும் நன்னனையும் கொங்கு நாட்டிற்கு அனுப்பிவிட்டோம்! வழியில் அவர்களுக்கு என்ன ஆபத்து நேரிட்டதோ?"

"அவர்களோடு சென்ற காவல் வீரர்களில், ஒருவன் மட்டும் திரும்பி வந்திருக்கிறான்!"

"உண்மையாகவா, படைத் தலைவரே?"

"ஆமாம் வேந்தே, மொட்டை அடிக்கப்பட்ட தலையோடு திரும்பி வந்திருக்கிறான்!"

"என்ன சொல்லுகிறீர்? கேட்கும் போதே என் இதயம் பிளந்துவிடும் போலிருக்கிறதே! காஞ்சனாவிற்கு ஏதாவது ஆபத்து..."

"எது வந்தாலும் இந்த நேரத்தில் தான் அரசே, நாம் கலங்கக் கூடாது! நம் மனதைக் கலக்கி, குழப்பமான சூழ்நிலையை உண்டாக்கி, இந்தத் தென்பாண்டி நாட்டை அபகரித்துவிடவே, பராக்கிரமன் இப்படியெல்லாம் சூழ்ச்சி செய்கிறான்!"

"நான் கேட்டதற்கு முதலில் பதில் கொடுங்கள் படைத் தலைவரே, காஞ்சனாவிற்கு ஏதாவது ஆபத்தா?...ஏன் மௌனமாகிவிட்டீர்? உமது மௌனம்; என் இதயத்தைப் பிளக்கிறது படைத்தலைவரே, பிளக்கிறது!"

"பெரியாற்றின் கரையிலே அரசியாரின் பல்லக்குச் சென்றபோது, புதர்களிலிருந்து திடீரென்று பராக்கிரமனின் போர்வீரர்கள் ஓடிவந்தார்களாம்! நமது வீரர்களோ சிலர்— ஒரு சிறு படையே அந்தக் காரியத்திற்காக அங்கே ஒளிந்திருந்ததாம்! நமது வீரர்களோ எண்ணிக்கையில் முப்பது பேர் — அவர்களோ இருநூறுக்கு மேற்பட்டவர்களாம்! இடமோ புதர்கள் சூழ்ந்தது! நேரமோ இரவு! நமது வீரர்கள் பலர் பலியானார்கள் — நான்கைந்து பேர் மட்டுமே கைது செய்யப்பட்டனர்!"

"காஞ்சனா?"

"அரசியாரையும் கைது செய்து ......"

"கைது செய்து?"

"மதுரைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்களாம் — சிறையில் அடைக்க!"

"அய்யோ காஞ்சனா?" என்று கதறிக்கொண்டே, பக்கத்திலிருந்த ஆசனத்தில் குலசேகரன் சாய்ந்துவிட்டான். சிறிதுநேரம் அவனால் ஒன்றுமே பேசமுடியவில்லை. இவ்வளவு நேரமும் கனல் கக்கிய அவன் கண்களில், புனல் தோன்ற ஆரம்பித்தது!

"அரசே!"

"மன்னிக்க வேண்டும் படைத் தலைவரே! எந்தவித கருத்தையும் இந்த நேரத்தில், என்னால் புரிந்து கொள்ள முடியாது!"

"தாங்கள் இப்படிக் கலங்குகிறீர் என்பது தெரிந்தால்..."

"அந்தப் பராக்கிரமன் கைகொட்டிச் சிரிப்பான் — காற்று வேகத்திலே திருநெல்வேலியின்மீது படையெடுத்து வருவான் — அவ்வளவு தானே?"

"திருநெல்வேலியின்மீது படையெடுப்பு! முடியாது! நிச்சயம் முடியாது! அவனால் அப்படிப் படையெடுத்துவர ஒருநாளும் முடியாது அரசே! நம் ஒற்றர்கள் மேலும் சில தகவல்கள் கொண்டுவந்திருக்கிறார்கள்! சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்! மன அமைதியும் பெற முயலுங்கள்! பிறகு வந்து தங்களைச் சந்திக்கிறேன்!"

"போகாதீர்கள், படைத் தலைவரே நன்னனைப் பற்றி ஒன்றுமே கூறவில்லையே!"

ஆளவந்தார் தலைகுனிந்து கொண்டார். வேதனையால் புழுங்கிக் கொண்டு, தன்னைச் சமாளித்துக் கொண்டு, "அவனைப் பற்றிச் சரியாக ஒன்றும் தெரியவில்லை, அரசே!" என்று தடுமாறும் குரலிலே கூறினார்.

"இல்லை படைத்தலைவரே, நீங்கள் வேண்டுமென்றே மறைக்கிறீர்! என் நன்னன் உயிரோடு இருந்திருந்தால், காஞ்சனாவின் அருகில் கூட அந்தக் கயவர்களால் நெருங்கி இருக்க முடியாது! இல்லை-நன்னன் உயிரோடு இல்லை படைத் தலைவரே, இல்லை!" என்று முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு, அவன் தேம்பினான்.

"யார் அங்கே?" என்று அழைத்ததும் வந்த சேவகனிடம், "வெளியில் நிற்கும் அந்தப் போர் வீரனை உள்ளே வரச் சொல்!" என்றார் ஆளவந்தார்.

மொட்டையடிக்கப்பட்ட தலையோடு இருந்த அந்தப் போர் வீரன், கண்கலங்க தலைகுனிந்தபடி அங்கே வந்து நின்றான்.

"அரசர் கேட்கிறார் நன்னனைப் பற்றி! அதை நீயே சொல்" என்று ஆளவந்தார் கூறியதும், அந்தப் போர்வீரன் பேச முகம் நிமிர்ந்தான்.

"கடைசிவரைக்கும் அரசியாரின் பல்லக்கை எதிரிகள் நெருங்காதபடி நன்னன் வாளைச் சுற்றிக் கொண்டு வட்டமிட்டார்! எங்களிலே பெரும்பாலோர் போரிட்டுப் பிணங்களாகிவிட்டனர்! என்னையும் இன்னும் நான்குபேரையும் உயிரோடு அவர்கள் பிடித்துவிட்டார்கள்! கடைசியில் நன்னன் ஒருவரே தனி வீரராக நின்று போரிட வேண்டியதாயிற்று! எனது உடலிலே கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரைக்கும், எமது அரசியாரை நெருங்க முடியாது என்று கொக்கரித்து, வாளை வீசியபடி பல்லக்கைச் சுற்றிச் சுற்றி வந்தார்! தனியாக நின்ற அந்தச் சிங்க வீரனைக் கண்டு, மதுரை வீரர்கள் மிரட்சியடைந்தனர்! அவர்கள் எண்ணிக்கையில் இருநூறுக்கு மேலிருந்தும், அவரை அண்ட அஞ்சி, தூரத்திலேயே நின்றபடி அம்பும் ஈட்டியும் எறிந்தனர்! நாலா பக்கங்களிலுமிருந்தும் திடீரென்று அவர்மீது வீரர்கள் பாய்வார்கள் - அவ்வளவு



பேரும்-சில நொடிகளில் தலையிழந்த முண்டங்களாக, உயிரிழந்த பிணங்களாக மண்ணிலே கிடப்பார்கள்! நன்னனின் உருவமே நீண்டு உயர்ந்துவளர்ந்துவிட்டதைப்போல அப்பொழுது அவர்களின் கண்ணுக்குக் காணப்பட்டதாம்! போராடினார். போராடினார் - உடலெல்லாம் அம்புகள் தைத்து, வேல்கள் துளைத்து, ஈட்டிகள் பாய்ந்து-இரத்தம் கொட்டக் கொட்டப் போராடினார்! ஓடி வந்தது ஒரு அம்பு! ஆ என்றார்! ஒரு கண்ணினின்றும் இரத்தம் வடிந்தது! அடுத்து வந்த அம்பும், மற்றொரு கண்ணையும் குருடாக்கிவிட்டது! கண்ணிழந்தார்! 'அய்யோ அரசியாரே!' என்று ஒரு முறை கதறினார் மறுகணம் அந்த மாவீரர் மண்ணிலே சாய்ந்தார்—மரணத்தை அணைத்தார்!" என்று அந்தப்போர்வீரன் கூறிமுடித்தான்.

"நன்னா! நன்னா! காஞ்சனாவைக் காப்பாற்ற கண்ணிழந்தாயாமே! கலங்காதசிங்கமே! கடமைவீரனே! அகநானூற்றின் பாடலே, அம்புகுடித்ததாமே உன் அழகுக் கண்ணின் ஒளியை! அய்யோ, என் கண்கள் குருடாகிவிட்டனவே! எங்கும் இருள்சூழ்ந்துவிட்டதே! நன்னா! நண்பா! உயிருக்கு உயிரானவனே! உத்தமனே! உயிர்விட்டாயே! என் இதயத்தில் அணையாத கனலிட்டாயே! அந்தோ! உன்னைப்போன்ற உயிர்த் தோழன், இனி எனக்கு எங்கிருந்துக் கிடைக்கப்போகிறான்! மாநிலம் முழுவதும் தேடினாலும்—மாணிக்கமே — உன்னைப்போன்றவனை நான் எங்கேயடா காணமுடியும்? படர்ந்திருந்த மாமரமே! நீ சாய்ந்துவிட்டாயே! இனி இந்த முல்லைக்கொடிக்கு வாழ்வேது நன்னா, வாழ்வேது?......தமிழ்ச் சங்கம் அழிந்ததோடு அழிந்துவிட்ட பகுத்தறிவை, பாண்டியநாட்டில் திரும்பவும் ஒளிபெறச் செய்ய வேண்டும்; மக்களின் அறிவுக்கண்ணை மறைத்திருக்கும் மூடக்கொள்கைகள் என்ற திரைகளைக் கிழித்தெறிய வேண்டும்— காடுமிராண்டிகளின் கடவுளர் கொள்கைகளைத் தவிடு பொடியாக்கவேண்டும் —என்றெல்லாம் பேசுவாயே! முழக்கமிடுவாயே! அறிவுரை புகல்வாயே! நன்னா! அறிவின் ஒளியே! என் ஆருயிர் நண்பா! மக்களின் உள்ளங்களுக்கு விடுதலை வேண்டும் என்பாயே — நீ இல்லாமல் அந்த விடுதலையை வாங்கித்தர, யாரால் இயலும் நன்னா, யாரால் இயலும்!"

"அரசே!"

"படைத்தலைவரே! நமது இளவல் நன்னன் — என் வாழ்வின் வழிகாட்டியாக இருந்தான்! அந்த அன்பின் உருவத்தை, ஆசைத் தம்பியை எனக்காக நீங்கள் இழந்துவிட்டீர்கள்-இழந்துவிட்டீர்கள்!"

"மன்னவா மனங்கலங்கினால் மாண்டவன் இனி மீண்டும் நம் எதிரில் வரப்போகிறானா என்ன? என் குலம் வாழையெனத் தழைத்துப் பெருக, இருவர் இருந்தனர்! என் தம்பி நன்னன் — என் மகன் சோலையப்பன்! அந்த இரண்டு கண்களிலே ஒன்றை இப்பொழுது இழந்துவிட்டேன்! நன்னனை இழந்துவிட்டேன்! என்றைக்குமே அடையமுடியாதபடி— காணமுடியாதபடி— இழந்துவிட்டேன்! அவனது அன்பு வழியும் முகத்தையும், அறிவு நிறைந்த பேச்சையும் இனி நான் காணவும் கேட்கவும் போவதில்லை! நன்னன் பிணமாகிவிட்டான்— நினைத்தாலே என்மனம் பகீர் என்று பற்றியெரிகிறது! துக்கம் என் கண்களை இருளடையச் செய்கிறது ...ஆனால் நன்னன் ஏன்செத்தான்? எப்படிச் செத்தான்? அரசியாரைக் காப்பாற்ற எதிரிகளில் எத்தனைப் பேரைப் படுபிணங்களாக்கினான்? அவன் உடலில் மூச்சின் கடைசி இழை இருந்தவரை, அவனது சுழலும் வாள் ஓயவில்லையாமே! அம்பும் வேலும் வைத்து, செங்குருதி கொட்ட, தோல் உரித்த உடலாக அவன் மாறியபோதும், ஒரு கணமும் தயங்கவில்லையாமே! கண்கள் இரண்டையும் இழந்து, பிணமாகச் சாய்ந்த நேரத்திலும், அரசியாரின் நலத்தை எண்ணினானாமே!

வேந்தே, அந்த வீரத்தை எண்ணினால் — அரசியாரை அண்டாதபடி பகைவர் கூட்டத்தை அஞ்சி நடுங்கும்படி செய்த, அந்தத் தீரத்தை நினைத்தால்—என் மனதிலுள்ள துக்கம் மறைந்து, பெருமிதம் பிறக்கிறது, அரசே!"

"படைத் தலைவரே, இந்த நன்றியை என் வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டேன்!" என்று கூறியபடி, ஆசனத்தில்சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான், குலசேகரன்.

"அரசே! தாங்கள் மிகவும் கலங்கிவிட்டிருக்கிறீர்கள்! கொஞ்சநேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்! ஒற்றர்கள் மூலம், முக்கியமான செய்தியொன்றை அறிந்தேன்! மதுரைமீது நாம் படையெடுக்க வேண்டிய கட்டத்திற்கு வந்துவிட்டோம்! சிறிதுநேரம் கழித்துவருகிறேன்! அதைக் குறித்து அப்பொழுது யோசிக்கலாம்!" என்று ஆளவந்தார் சொல்லிவிட்டு, அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

[ வளரும் ]



# உலக அரங்கில்

எத்துணையோ திட்டங்களுடன் நான்கு நாள் மாஸ்கோ பயணம் புறப்பட்டார் இங்கிலாந்துப் பிரதமர் வில்சன். அவர் சென்றதும தெரியவில்லை; வந்ததும் தெரியவில்லை, பல பேருக்கு! ஏழாண்டுகளுக்குப் பிறகு முதன்முதலாக இங்கிலாந்துப் பிரதமர் ஒருவர் சோவியத் யூனியன் செல்வது இதுவே முதல் தடவை என்ற முக்கியத்துவம் வாய்ந்த அந்த பயணம் மிகச் சாதாரணமான செய்திகளுள் ஒன்று போலத்தான் இருந்தது.

உலக ஆயுத நிராகரிப்பில் சோவியத் யூனியனுடன் பேச்சுவார்த்தை நடத்துவது, வியட்நாம் கொள்கைக்கு ஆதரவு தேடுவது, ரொடீஷிய நடவடிக்கைக்கு ஒப்புதல் பெறுவது ஆகிய எண்ணங்களை உள்ளடக்கியதாக இருந்தது அவரது பயணம். ஆனால் அவர் மாஸ்கோ சென்று இறங்குவதற்கு முன்னலேயே இரஷ்யாவிலிருந்து வந்த செய்தியொன்றுகூறியது. "வில்சன் வருவது ஒரு தேர்தல் ஸ்டண்ட்" என்று!

ஆனால் வில்சன் எதிர்பார்த்துச் சென்றதென்னவோ தேர்தலை அடிப்படையாக வைத்துதான். இரஷ்யப் பயணம் வெற்றியில் இல்லாவிட்டாலும் நல்ல விளமபரத்தில் முடிந்தால் அந்த 'ஒளி'யிலேயே பொதுத் தேர்தல் நடத்தி வெற்றி வாயப்பைப் பெற்றுவிடலாம் என்பது அவரது யூகம். உள் மனம் இவ்விளவு "பச்சை"யாக வெளிப்பட்டதனுல் தானே என்னவோ இரஷ்யர்களும் "விழி"த்துக்கொண்டார்கள். இங்கிலாந்தின் பேச்சை நம்பி வியட்நாம் பிரச்சினையில் எந்த ஒரு மாற்றத்தையும் மேற்கொள்ளத் தான் தயாராயில்லை என்பதையும் ஏற்கனவே ரொடீஷியா விவகாரததில் ஸ்மித்தின் ஆட்சியை அகற்றுவதில் காட்டவேண்டியகண்டிப்பைக காட்டவில்லை என்ற உலகின் பெரும் பகுதி நாடுகளின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டுள்ள இங்கிலாந்தின் போக்குக்குத் தான் எந்த வித ஒத்துழைப்பைத் தருவதும் தனது பெயருக்குக் களங்கம் விளைவித்துக் கொள்ளும் செயலாக முடியும் என்பதையும் ஒளிவு மறைவு இல்லாமல் தெரிவித்திருக்கிறது இரஷ்யா. மேலும் அவர் கொண்டு சென்ற ஆயுதக் குறைப்புப் பிரச்சினையிலும செயல் ரீதியான ஒத்துழைப்பைக் கொடுதது "உலகின் அமைதி விரும்பி" என்ற பெயரை பிரிட்டன தட்டிககொண்டு செல்லும்படி ஏன் விடவேண்டும் என்று "லாப நஷ்ட"க் கணக்குப் போட்டுப் பாாத்திருக்க வேண்டும் இரஷ்யா.

உள்நாட்டிலும் அவருக்குப் பல வித பாதகமான சூழ்நிலைகள்தான் ஆரம்ப முதலே இருந்துவருகின்றன. அமெரிக்காவுடன் உறவு முறைகள், இந்தியா - பாகிஸ்தான் போர் சமயத்தில் எடுத்த முடிவுகள், வியட்நாம் பிரச்சினையில் முன்னணியில் இல்லாமை, ஐரோப்பியப் பொருளாதாரச் சந்தை, காமன்வெல்த் வர்த்தகக் கட்டுப்பாடுகள்.—இவை அனைத்துக்கும் மேலாக ரொடீஷிய விவகாரம் ஆகிய அனைத்திலும் ஒன்று இயற்கைப் பாதகங்களினுல் அல்லது தவருன இராஜதந்திரத்தினுல் வில்சனது தொழிற் கட்சி அமைச்சரவை தோல்விப் படலங்களையே மேலும் மேலும் சுமந்து வந்திருக்கிறது.

இதையல்லாமல் தொழில் கட்சிக்கே உயிர் போன்ற தேசிய மயமாக்கும் கொள்கையில் நாட்டின் இரும்புத் தொழிற்சாலைகளை இன்னும் அரசாங்க உடமையாக ஆக்காமல் இருப்பது கோழைத்தனத்தின் அறிகுறி என்று கட்சியிலேயே சில தீவிரவாதிகள் பிளவுபட்டு நிற்கிருர்களாம்.

இதையல்லாமல் எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் அமைப்பு அரசியல் தாக்குதலுக்கான புள்ளி விவரங்களுடன் இப்போதிருந்தே தயாராகயிருந்து வருகிறது.

இந்த நிலையில்தான் இந்த மாதம் இறுதியிலேயே பொதுத தேர்தலை நடத்திவிட உத்திரவு பிறப்பிக்குமாறு வில்சன் அரசிக்குத் தெரிவித்துக்கொணடிருப்பதாகச் சில செய்திகள் கூறுகின்றன. தகவல்களும் உண்மையாக இருந்து பொதுத் தேர்தலும் மார்ச் 31-ந் தேதியில் நடைபெறுமென்ருல் அதை, வில்சன் எடுத்த துணிவான முடிவு என்றுதான் சொல்லவேண்டும.

அறிவிப்புக்கும் தேர்தலுக்கும் இடையில் 30 நாட்கள இடைவெளி இருக்கவேண்டும் இங்கிலாந்து நாட்டின் சட்டப்படி. மார்ச் திங்கள் 31-ம் நாள் தேர்தல் உறுதி என்ருல் இந்த ஏடு வாசகர்கள் கைகளுக்குக் கிடைப்பதற்கு முன்னரே தேர்தல் பற்றி திட்டவட்டமான அறிவிப்பு வந்திருக்கும். கடந்த பதினெட்டு மாதங்களுக்குள் இங்கிலாந்தில்நடக்க இருக்கும் இரண்டாவது பொதுத்தேர்தல் இது. 1964 அக்டோபர் திங்களில் 3 எண்ணிக்கைப் பெரும்பான்மையில் பதின்மூன்றுஆண்டுகளுக்குப்பின்னர் முதன்முறையாக மீண்டும் பதவிக்கு வந்தது தொழிற் கட்சி.

பிரதமர் வில்சன் எந்த அடிப்படையில் இவ்வளவு சீக்கிரத்தில் பாதகமான சூழ்நிலைகளே அதிகம் இருக்கும் தருணத்தில் பொதுத் தேர்தலை நடத்திவிடுவது என்ற முடிவுக்கு வந்தார் என்பது இன்னும் கேள்விக் குறியாகவே உள்ளது.

ஓரளவுக்குச் சாதகமாக உள்ள வாக்கெடுப்பு முடிவுகள், சர்வதேச வியாபாரத்தில நல்ல நிலையிலிருக்கும் ஸ்டெர்லிங் நாணய முறை, 1970-ம ஆண்டு சமயத்தில் இங்கிலாந்தின் பாதுகாப்புச் செலவை 4000 பவுன்கள் அளவில் குறைத்துவிடலாம. என்ற மக்கள் வரவேற்பைப் பெற்றுள்ள திட்டம ஆகிய ஒரு சில சாதகமான சூழ்நிலைகளை மனதில் வைத்துதான் வில்சன் தேர்தலை மிகச் சீக்கிரம் நடந்த இருப்பதற்குக் காரணம் என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

ரொடீஷியப் பிரச்சினைக்கு ஒரு புதிய மக்கள் ஒப்புதலைப் பெற்றுவிடவேண்டும் என்ற தனித்த காரணமும் வில்சனது அவசர முடிவுக்கான யூகமாக இருக்கலாம என நம்பப்படுகிறது. ரொடீஷியா பற்றி அமைச்சரவை எடுததுள்ள நடவடிக்கைகள் சரி அல்லது சரி இல்லை என்று வாதப் பிரதிவாதங்களில் காலத்தைப் போக்கிக் கொண்டிருபபதைவிட மக்களே பார்த்து அமைச்சரவையை ஆதரிப்பதன அல்லது வெறுப்பதன் மூலம் ஒரு தீர்ப்பை உருவாக்கட்டும என்ற ஒரு எண்ணமகூட வரவேற்கத்தக்க ஒன்றுதான்.

உலகின் ஜனநாயக வாதிகளால் முக்கிய திருவிழாபோல கணடும் கேட்டும, படித்தும் களிககப்படும் இங்கிலாந்தின பொதுத தேர்தலில் இததடவையும இப்படிப் பல சுவையான பிரச்சினைகள் அடங்கியுள்ளன.

—அரசியல் மாணவன்

# இப்பொழுது நடைபெறுகிறது




சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.